Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

உங்கள் வியாபாரம் சிறக்க இப் பகுதியில் விளம்பரம் செய்யுங்கள்

சலுகைக் கட்டணம்

200 ரூபா

மட்டுமே அறவிடப்படும்

ஒளி - 2 - கதிர் -186 24-10-2001 புதன்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா - 6/-

# படுவான்கரையில் படை நகர்வு

## இருவர் உடல் சிதறிப்பலி; 8பேர் காயம்

(அரியம், அதிரன், களுவாஞ்சிகுடி நிருபர், ஜோசி)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின்கட்டுப்பாட்டுப் பகுதிகளான பெரிய போரதீவு, பழுகாமம் அம்பிளாந்துறை, ஆகிய பகுதிகளை நோக்கி, நேற்றுப் படையினர் பாரிய படை நகர்வொன்றை மேற்கொண்டனர். இப்படை நகர்வின்போது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், எட்டுமாத குழந்தை உட்பட 8பேர் காயமடைந்துள்ளனர்**



காயமடைந்த ஏ. புனிதராஜா அம்பிளாந்துறை

நேற்று முன்தினம் இரவு மண்டூர் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படை முகாமிலிருந்து வந்த படையினர் இரவிலே பதுங்கியருந்து அதிகாலை 3.30 மணியளவில் நகர்வு நடவடிக்கையை ஆரம்பித்ததாக தெரிய வருகிறது அதிகாலை வேளையில் மாவேற்குடா பகுதியில் இருந்து பவள் வாகனம் சகிதம் முன்னேறிய படையினர் பழுகாமம் ஊடாக அம்பிளாந்துறை தாமரைச் சந்தி வரையில் முன்னேறிச் சென்றனர்.

### நினைவுத் தூபி தகர்ப்பு

அங்கிருந்த விடுதலைப் புலிகளின் நினைவுத் தூபி ஒன்றையும் முன்னேறிய படையினர் தகர்த்துள்ளனர். 96ம் ஆண்டு அம்பிளாந்துறைச் சந்தியிலிருந்த படை முகாம்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது மரணமான 16 விடுதலைப் புலிகளின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியையே படையினர் உடைத்து விட்டு அப்பகுதியிலிருந்து பின் வாங்கிச் சென்றனர்.

படையினரின் இந்நகர்வின்போது புலிகள் தரப்பிலிருந்து பெரிய அளவிலான எதிர்த்தாக்குதல் ஏதும் நடாத்தப்படாத போதும் ஒரு இடத்திலிருந்து சிறிய தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுத்ததாகவும் விசேட அதிரடிப்படையினர் ஒருவர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



காயமடைந்த தும்பங்கேணியைச் சேர்ந்த கமலேஸ்வரி மகன் கஜனுடன்

### கடைகள் சேதம்

படையினர் புழுகாமம் பெரிய போரதீவு ஆகிய பகுதிகளிலுள்ள பொதுமக்களின் சில கடைகள் மற்றும் வீடுகளை எரித்துவிட்டுச் சென்றுள்ளனர்

பெரிய போரதீவுச் சந்தியில் நித்தியானந்தன் என்பவரின் கடைத்தொகுதி உட்பட ஆறு கடைகளும் ஐந்து வீடுகளும், பழுகாமத்தில் உதயன் என்பவரின் கடைகளும் சில வீடுகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

### எறிகணைக்கு இருவர் பலி

படையினருக்கு ஆதரவாக செட்டிபாளையம், குருக்கள்மடம் ஆகிய பகுதிகளிலிருந்து படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணை வீச்சின் காரணமாக அம்பிளாந்துறையில் இருவர் கொல்லப்பட்டும் 8மாத குழந்தை உட்பட 8பேர் காயமடைந்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

இச்சம்பவத்தினால், வயல் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த அம்பிளாந்துறையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையானசதாசிவம் கமலநாதன் (31) 4 பிள்ளையின் தந்தையான தம்பிமுத்து மகேசன் (37) (இவர் உடல்சிதறுண்டு) ஆகியோர் மரணமானார்கள்.

காயமடைந்தவர்களான 8மாதக் குழந்தை ச. வஜிதா, சின்னத்தம்பி பத்மநாதன் (30) சிவலிங்கம் [illegible]மேஸ்வரி (20), கே சீவரெத்தினம் (38), ஏ புனிதராஜா (13) எஸ் கமலேஸ்வரி (30), க சிவநேசராஜா (52), எஸ். கஜன் (5) ஆகியோர் உழவு இயந்திரத்தில் [illegible] களுவாஞ்குடி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிய சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் மானாவாரி நெற்செய்கை ஆரம்பமானதால் வயல் வேலைகளுக்கு எவரும் செல்லவில்லை வெல்லாவெளி பட்டிபளை பகுதிகளிலுள்ள பாடசாலைகள் இயங்கவில்லை. மக்கள் பீதியுடன் பல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து சென்றனர் அம்பிளாந்துறைப் படகுச்சேவை பட்டிருப்பு பாலத்தினூடாக போக்குவரத்துச் சேவை முற்றாக

(8ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு நகரில் பல பகுதிகளில் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல்

## புலிகளுக்கு உதவினால் கடும் தண்டனை என எச்சரிக்கை

(அதிரன்)

மட்டக்களப்பு நகரின் பல பகுதிகளில் நேற்று காலை 7மணி தொடக்கம் சுற்றி வளைத்து இராணுவ, பொலிஸ், அதிரடிப படையினர் இணைந்து தேடுதல் ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு எல்லை வீதி தொடக்கம்,ஊறணிச்சந்தி வரையான தான்டவன்வெளி, ஞானசூரியம் சதுக்கம், கள்ளியங்காடு ஜெயந்திபுரம் .இருதயபுரம் போன்ற பல பகுதிகள் சுற்றி வளைப்புக்குட் பட்டிருந்தன.

இச்சோதனையின் போது பொது மக்களுக்குப் பல அறிவுறுத்தல்களை படையினர் விடுத்தனர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வரும் படுவான் கரை மக்களுக்குத் தாம்

(8ம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க வேட்பாளர் சத்திய மூர்த்தி தமிழ்க் காங்கிரசில் வேட்பாளராகிறார்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சியில் கடந்த 1994ம் ஆண்டு தேர்தலிலும் ,கடந்த வருடம் இடம்பெற்ற தேர்தலிலும் போட்டியிட்ட இராஜன் சத்தியமூர்த்தி இம்முறை இடம்பெறும் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட விண்ணப்பித்திருப்பதாக தெரிகிறது.

இவரது விண்ணப்பத்தை தமிழ் காங்கிரஸ் தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இதை யிட்டு மட்டக்களப்பு தமிழ் காங்கிரஸ் வட்டாரங்களிடமும், தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய தேர்தலில்

(8ம் பக்கம் பார்க்க)

# கண்மூடித்தனமான எறிகணை வீச்சை உடன் நிறுத்துமாறு கோரிக்கை

(அரியம்)

பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமாக படுவான் கரைப்பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளும் எறிகணைத் தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டுமென, காந்தி சேவா சங்கத்தின் பொதுச்செயலாளர் கதிர் பாரதிதாசன் ஜனாதிபதிக்கு நேற்று மாலை அவசரத்தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பிளாந்துறையிலும், துப்பங்கேணியிலும் நேற்று படையினர் மேற்காண்ட ஈவிரக்கமற்ற எறிகணை வீச்சின் காரணமாக பொது மக்கள் கொல்லப்பட்டும் எட்டுமாத சிறுமி உட்பட பலர் காயமடைந்ததுடன் பொது மக்களின் வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயல்களை தாம் வன்மையாக் கண்டிப்பதாகவும் அப்பாவிப் பொது மக்களை இலக்கு வைத்து படையினர் எறிகணைத் தாக்குதல் நடாத்துவதை பாதுகாப்பு அமைச்சரும் இந்த நாட்டின் தலைவரும் என்ற முறையில் உடனடியாக இதைத் தடுக்க வேண்டும் எனவும் அத்தந்தியில் கதிர் பாரதிதாசன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து படுவான் கரைப் பகுதியில் படையினர் அடிக்கடி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# விசேட தாக்குதல் அணிப் பொலீசார் மூவர் கைக்குண்டுத் தாக்குதலில் காயம்

## முச்சக்கர வண்டியில் வந்த இளைஞர் தாக்கினராம்

முச்சக்கர வண்டியில் வந்த மூவர் நேற்று வவுனியா கூமாங்குளப் பகுதியில் வீதி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விசேட தாக்குதல் அணிப்பொலீசார் மீது மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்கு லில் மூன்று பொலீசார் காயமடைந்தும்,இரு இளைஞர்கள் மரணமடைந்தும் உள்ளனர்.

இப்பகுதியில் துவிச்சக்கர வண்டிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலீசார் வீதியால் வந்த முச்சக்கர வண்டியொன்றினை நிறுத்திய போது முச்சக்கர வண்டியிலிருந்த ஒருவர் கைக்குண்டை வீசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூவரில் ஒருவரிடம் கைத்துப்பாக்கியும் மற்றவரிடம் இயந்திரத் துப்பாக்கியும் இருந்ததாகத் தெரிகிறது இத்னைத் தொடர்ந்து நடந்த தாக்குதலிலேயே இருவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.


ஆட்டோவிலிருந்த ஒருவர் காயங்களுடன் தப்பியுள்ளதாகவும் நீதிமன்ற விசாரணையின் போது சாட்சியமளிக்கப்பட்டது.

**வீட்டு காணி விற்பனைக்கு**


மட்டக்களப்பு தோமஸ் வீதியில் வீட்டு நிலம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

065 - 24782 Advt



யாழ். மாவட்டத்தில் ஆள் எண்ணிக்கையைவிட இருமடங்கு தொகை வாக்குச் சீட்டுக்கள். -செய்தி-



ஆள் என்னத்துக்குடாப்பா தாள்இருந்தா எம்.பீதானே_

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்றது

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி ,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk


## ஆளுக்கு இரண்டு

தேர்தல் நெருங்க நெருங்க, தில்லுமுல்லுகளுக்கான திட்டங்களும், முன்னேறபாடுகளும் முன்கூட்டியே ஆரம்பித்து விடும்.

கள்ள வாக்கு, வாக்குச்சீட்டு மோசடி, வாக்குப் பெட்டி மோசடி எனவும், இவை எல்லாவற்றுக்கும் அப்பால் வாக்குகள் கணக்கெடுப்புக்கு உள்ளாக்கப்படும் போது, தெரிந்தவர்களைக் கொண்டு ஊழல் செய்தல்வரை தேர்தல் மோசடிகள் பரந்தளவிலானவை.

மக்கள் சேவைக்குப் புறப்படுவதாகக் கூறி, அவர்களிடம் வாக்குச் சேர்த்து பாராளுமன்றப் பிரதிநிதிகளாகச் செல்ல விரும்புவர்கள் அதற்காக மோசடிகளில் ஈடுபட முனைவது, ஜனநாயகத் தேர்தலின் கேலிக்கூத்து.

தேர்தல் வாக்களிப்பில் இடம் பெறும் மோசடிகளைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் ஒவ்வொரு முறை தேர்தலிலும், எப்படியோ ஏராளமான மோசடிகள் நடைபெறவே செய்கின்றன. ஆட்சியில் இருப்பவர்களும், தமக்கிருக்கும் வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி, அடுத்தமுறையும் ஆட்சிக் கட்டில் ஏறுவதற்காக மோசடிகளில் ஈடுபடத்துணிவதும் இங்கு வளக்கமான ஒன்று

இதனால், தேர்தல் ஆணையாளரும் கண்காணிப்பாளரும், அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்படும் கண்காணிப்புக் குழுக்களும், வெறும் கண்துடைப்புச் செயற்பாடுகளையே மேற்கொள்ள முடிகிறது.

எவ்வாறாயினும் சில மாதங்களுக்கு முன்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் ஆட்சி கலைந்து போகாமல் தடுப்பதற்காக, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி.யுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்து கொள்ளப்பட்ட, 17ஆவது திருத்தச் சட்டம், தேர்தல் ஆணையாளருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கியிருப்பதாகவும், எனவே, இம்முறை அவரால் மோசடிகளை அதிகளவில்கட்டுப் படுத்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தன்னுடைய முதற்கட்ட நடவடிக்கையாக, தேர்தலில்போட்டியிடும் எந்தவோர் கட்சியும் அரச வாகனங்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது எனஆணையாளர் தடை விதித்துள்ளார்.

ஆனாலும்தடையையும் மீறி யாராவது அரசவாகனங்களைப் பிரசார நடவடிக்கைக்குப் பயன்படுத்தினால், என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர் அறிவிக்கவில்லை. கடுமையான தண்டனை ஏதும் வழங்கப்படுவதுடாகவே, இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

எல்லாவற்றையும் விட, சட்டவரம்புகளுக்குள்ளேயே காணப்படுகின்ற மோசடிகள் தொடர்பிலே, ஆணையாளர் கவனமெடுக்க வேண்டியதே மிகவும் அவசியமானதாகும்.

சென்ற தடவை போலவே இம்முறையும் தேவையான எண்ணிக்கையை விட இருமடங்கு அளவான வாக்களர் அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995ம் ஆண்டு யாழ்குடாவை விட்டு ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையிலும், 1981ல் நடைபெற்ற வாக்காளர் பட்டியலின்படியே இம்முறையும் வாக்காளர்அட்டைகள் அங்கு அனுப்பி வைக்கப் பட்டள்ளன.

இதனால் தேவையான 2,75,000 வாக்குச் சீட்டுக்களுக்குப்பதிலாக 6,33,000 வாக்குச்சீட்டுக்கள் அங்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 3,58,000 மேலதிக வாக்குச் சீட்டுக்கள் வெறுமனே யாழ்குடாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

சென்ற தடவை தேர்தலிலும் இத்தகைய, ஆளில்லாத வாக்குச்சீட்டுக்களை, சாராயம், பணம் கொடுத்துக் கொண்டு வருபவர்களிடம் பொடுத்து தமக்கு வேண்டிய வாக்குகளை போடச்செய்யும் கைங்கரியம் நிறையவே இடம் பெற்றது.

இதுவே இம்முறையும் நடைபெறப்போகிறது இதை தடுக்க தேர்தல் ஆணையாளர் என்ன செய்யப்போகிறார்.

வன்னிப்பகுதியில் அட்கணக்கெடுப்பில் தவறு இருப்பதாக அரச அதிபரையே குற்றம் சுமத்தி, அங்கு அனுப்பப்படும் உண வுப் பொருட்களைக் கட்டுப்படுத்தியது அரசு.

இதனால் இரண்டு பேருக்கு ஒருவருடைய உணவே அங்கு அனுப்பப்பட்டுவருவதாக உள்ளுர்க் கணக்கெடுப்புகள் தெரி விக்கின்றன.

தமக்குத் தேவையான இடங்களில் மட்டும் கணக்கெடுப்புத் தவறுகளை கணக்கெடுக்காது ஒருவருக்கு இரு வாக்குச் சீட்டுக்களை வழங்குகிறது அரசு.

இதுதான் இந்த நாட்டின் தேர்தல் ஜனநாயகம்.

# தமிழ்மொழி அமுலாக்கலில் காட்டிய அலட்சியமே போருக்குக் காரணம்

**பூ.ம.செல்லத்துரை**

(நேற்றையத் தொடர்ச்சி)

என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் மொழியை அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்வதில் எவ்வித தீங்குமில்லை,நியமன எல்லைக்குள் பல்வேறு சமூகங்கட்கிடையில் ஒற்றுமையை உண்டாக்க இது ஏதுவாகும் இரண்டு மொழிகளையும் அரசகரும மொழியாகக் கொண்டு வருவதற்கு நான் எதிரல்ல

1932 ம் ஆண்டு சட்ட சபை நிறைவேற்றிய மொழிச் சட்டத்தையும் 1944 ஆண்டு சட்ட சபை நிறைவேற்றிய மொழிச்சட்டத்தை அமுல் செய்யாது விட்டது ஆட்சியாளர்களின் இறுமாப்பும் அதிகார வெறியுமாகும். இதன் விலையை இன்று அப்பாவிச்சிங்கள, தமிழ் இளைஞர்கள் அனுபவித்துக் கொண்டுள்ளார்கள். 1948ம் ஆண்டுக்குப்பின் ஆட்சியமைத்த ஐ.தே. கட்சி தலைவர் அமரர் டி.எஸ்.சேனநாயக்கா-1951ம் ஆண்டு ஆடி மாதம் 24ந் தேதி பாராளுமன்றத்தில் ''சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்று சபை தீர்மானித்துள்ளது. சபையின் தீர்மானத்தை அமைச்சர்களான நாங்கள் நிறை வேற்றக் கடமைப்பட்டுள்ளோம். என்றார்.

அமரர் டி.எஸ்சேனநாயக்காவின் அகால மரணத்தைத் தொடர்ந்து அமரர் டட்லிசேனநாயக்கா பிரதமரானார். இதனால் வெறுப்படைந்து வெளியேறிய அமரர் எஸ்.டபிளியு ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். அரிசி விலை ஏற்றம் அதை எதிர்த்து நடைபெற்ற மக்கள் கிளர்ச்சியோடு டட்லி சேனநாயக்கா பதவியை இராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து சேர்.ஜோன் கொத்தலாவெல பிரதமரானார். 1954ம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்ற பிரதமர் சேர்-ஜோன் கொத்தலாவெல ''சிங்களமும் தமிழும் நாட்டில் ஆட்சி மொழி என உறுதி கூறினார்.

1955ம் ஆண்டு மாதம் பையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மகா நாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். என்ற தீர்மானத்தை நிறைவு செய்தனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மொழிக் கொள்கையால் பாதிக்கப்பட்ட ஐ.தேகட்சி 1956ம் ஆண்டு மாசி மாதம் 1ம் 2ம் 3ம்நாட்களில் களனியில் நடை பெற்ற மகாநாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற தீர்மானத்தை நிறைவு செய்தது. பண்டார நாயக்காவுக்கு ஐ.தே கட்சியின் மகாநாட்டு மொழி சம்மந்தமான தீர்மானம் திடீர் தாக்கத்தை ஏற்படுத்தியது. மொழிக் கொள்கையில் ஐ.தேகட்சியின் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு மேலான தீர்மானம் ஒன்றைத் தனது கட்சி மக்கள் முன் வையாது விட்டால் வரும் தேர்தலில் தனது கட்சி ஆட்சி அமைக்கமுடியாத நிலையை நினைப்பை உணர்ந்ததும் எப்படியும் ஐ.தே கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்னும் உறுதியாளும் அமரர் பண்டாரநாயக்கா'' இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள்''சிங்ளத்தை ஆட்சி மொழி ஆக்குவேன் என சிங்கள மக்கள் முன் கூறினார்.

1944ம் ஆண்டு தானே வழி மொழிந்து சட்ட சபையில் நிறைவேற்றிய''சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் ஆட்சிமொழி என்ற சட்டத்தையே சவக்காலைக்கு அனுப்பிவிட்டு 1956ம் ஆண்டு ஆனி 5ம் நாள் தனிச்சிங்களம் மட்டும் இந்த நாட்டில் ஆட்சி மொழி என்ற சட்டத்தைக் கொண்டு வந்த சிங்களத் தலமையிடம் நேர்மை உண்டா? நியாயத்திற்கு ஜனநாயகத்திற்கு இடமுண்டா? வசதி வாய்ப்புண்டா?

சிங்களத் தலைவர்கள் அவர்கள் எந்தக் கட்சிக் காரர்களாக இருந்தாலும், அதிகாரத்திற்காக கொள்கை கோட்பாடுகளை தூக்கி எறிந்து விடுவார்கள் என்பதை பண்டாரநாயக்காவின் மொழி மசோதா நிலை நாட்டி வரலாற்றில் மாறாத மறையாத வடுவை நிலை நாட்டி விட்டது. சிங்களவர் முதலில் தாங்கள் சிங்களவர் பின் தான் தேசியம் பேசுவார்கள் அப்பட்டமான சுய இன நல வாதிகளாக இருந்ததால் தேசியத்தலைமை எட்டமுடியவில்லை.

5.8.1958ம்திகதி தமிழ் மொழி நியாயமான அளவுச்சட்டம் பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகளில்லாமலே நிறைவு செய்யப்பட்டது. இச் செயல் மூலம்சிங்களவர் ஆள்பவர்களாகவும் அவர்கள் விரும்பித்தருபவற்றையே தமிழ் மக்கள் பெற வேண்டும். என்ற அதிகார வெறியை தெளிவு காட்டியுள்ளது. அதன் பின் 1961 ம் ஆண்டு 3ம் இலக்க நீதி மன்றச் சட்டம் அறிமுகமாகியது. நீதி மொழிச்சட்டம் தமிழைப் பிரயோகிப்பதில் எவ்வித அழுத்தங்களையும் கொண்டிருக்கவில்லை. அதே போல 1965ம் ஆண்டு தந்தை செல்வாவுக்கும் டட்லிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி 1968ம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தைப் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் கொணர்ந்து நிறை வேற்றினார்கள், ஆனால் அமுல் படுத்தப்படவில்லை.

1970ம் ஆண்டு சிறிமாவோ தலைமையில் ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்றது. அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த படி புதிய அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தினார்கள் அந்தச்சபை 1972 ம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் திட்டத்தைத் தந்தது. அதில் தமிழ் மொழி பற்றி 1958ம் ஆண்டில் 28ம் இலக்க தமிழ் மொழிச்சட்டத்திற்கு இணங்கி இருக்க வேண்டும் என்றிருக்கிறதேயொழிய, 1968ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தை முழுமையாக புறம்தள்ளியுள்ளது.

1977ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐ.தே.கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்குவந்தது.

அந்த ஆட்சி வந்ததும் 1972ம் ஆண்டுக்கான அரசியல் திட்டத்தைப் புறம் தள்ளி 1978ம் ஆண்டு ஒரு புதிய அரசியல் திட்டத்தை அறிமுகம் செய்தது. அதில் மொழி விடையமாகப்பின் வரும் அரசியல் யாப்பு ஏற்பாடு காணப்படுகின்றன.

''இலங்கையின் அரச கரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும். இலங்கையின் தேசிய மொழி சிங்களமும் தமிழுமாதல் வேண்டும். அரச கரும மொழியே இலங்கை முழுவதிலும் நிருவாக மொழியாக வேண்டும். ஆனால் வடக்குக்கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி நிருவாக மொழியாகப் பயன் படுத்த வேண்டும்.

இதன் மூலம் இலங்கையின் அரச கரும மொழி சிங்களம் தேசிய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று வட கிழக்கில் நிருவாக மொழி தமிழ்ஆனால் வட கிழக்கில் அரசகரும மொழி அந்தஸ்து வழ ங்கப்படவில்லை. இருந்தும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட 13ம் அரசியல் சீர்திருத்தத்தை அரசு கொண்டு வந்தது. அதன் மூலம் சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும் அதே வேளை தமிழ் மொழியும் அரசகரும மொழியாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது அதுவும் ஒரு தட்டிக்கழித்த நிலையே யொழியதிருப்தியான மன நிலையில் ஆக்கப்பட்ட சூழ் நிலையைக் காட்டவில்லை.

1989ம் ஆண்டு பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது 16ம் அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதில் சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழியாக இருக்க வேண்டும் வட கிழக்கு மாகாணங்களின் பொது நிறுவனங்களின் பதிவேடுகள் தமிழ் மொழியில் பேணப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களில் சிங்கள மொழியில் பேணப்பட வேண்டும். எனக்கூறப்பட்டிருக்கிறது

1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையார், ஒரு அரசியல் பொதியை அறிமுகம் செய்தார். அதில் மொழி சம்மந்த மாக பின் வரும் விடையங்கள் காணப்படுகின்றன.''இலங்கைக் குடியரசின் தேசிய மொழிகளாகச் சிங்களமும் தமிழும் ஆங்கிலமும் அமைதல் வேண்டும். குடியரசின் அரசகரும மொழியாக சிங்களமும் தமிழும் இருக்க வேண்டும்.

இத்திட்டம் சட்ட அங்கிகாரம் பெறாத ஒரு திட்டம். சட்ட அங்கிகாரம் பெற்ற திட்டங்களையே அமுல் செய்யாத அதிகாரிகள் அதை ஏற்பார்களா என்பது கேள்விக் குறியேயாகும். சுதந்திரத்தின் பின் சிங்களத் தலைமைகள் மொழிப்பிரச்சியையையே மூலப் பிரச்சினையாக வைத்து அரசியலை ஒட்டி ஆயுதக்கலாசாரத்தில் நாட்டைத் தள்ளியுள்ளார்கள்.

காலத்திற்குக் காலம் நாக்கையும் சட்டத்தையும் மாற்றி மாற்றி விளையாடிய வினையே வேதனையாகி நாட்டைச் சீரழிக்கின்றது.

இவற்றை யாருமே சிந்தித்ததில்லை, இலங்கையின் ஆரம்பமுதல் ஆட்சி மொழியாகவும் அன்னியர் தொடர்பு மொழியாகவுமிருந்த தமிழ் மொழி 1956ம் ஆண்டு ஆட்சி மொழி அந்தஸ்தைப் பெற்ற சிங்களத்தாலும் சிங்கள தலைமைகளாலும் பட்டபாடே நாட்டை நாறவைத்துவிட்டது. நாடு கோரயுத்தத்திற்கும் கொடிய தாக்குதல்களுக்குமுகம் கொடுத்து முகவரியை இழந்து கொண்டிருக்கிறது.

இந்நிலை மாற்றப்பட வேண்டுமேயானால்1944ம்ஆண்டு சட்டசபை நிறை வேற்றிய மொழிச்சட்டத்தை திரும்பவும் நாடாளுமன்றம் நிறைவு செய்ய வேண்டும். இன்று வேற்றுமை நோக்கிலுள்ள தமிழ் பேசுவோரும் சிங்களம் பேசுவோரும் இணைய 1933ம் ஆண்டு கண்டிச்சிங்கள மக்கள் கொணர்ந்த இணைப்பாட்சித்திட்டம் அமுலாக்கப்பட வேண்டும்.

(முற்றும்)

> **காலத்திற்குக் காலம் நாக்கையும் சட்டத்தையும் மாற்றி மாற்றி விளையாடிய வினையே வேதனையாகி நாட்டைச் சீரழிக் கின்றது.**

# சிறிக்கொத்தா மீது கைக்குண்டு வீச்சு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் காயம்

(கொழும்பு)

**ஐ**க்கிய தேசியக் கட்சியின் தலமையகமான சிறிக்கொத்தா மீது செவ்வாய் அதிகாலை இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலில் சிறிக்கொத்தாவில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வேற்பு மனுத் தாக்கல் முடிவடைவதற்கு இடையில் தற்போது தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கிவருவதாகவும் இதன் ஒரு அங்கமாகவே ஐ.தே.கட்சி தலைமையகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஐ.தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மின்வெட்டு அமுலாக்கல் ஒன்றரைமணி நேரமாக குறைப்பு

**நா**டளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வந்த மின்வெட்டு நேற்றுமுதல் ஒன்றரை மணிநேரம் குறைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் புதிய மின்வெட்டு நேரங்கள் வருமாறு.

'ஏ' வலயம் இரவு 8-15 தொடக்கம் 9-45 வரை, 'வீ' வலயம் இரவு 9.00 மணி தொடக்கம் 10.30 மணிவரை, 'சி' வலயம் மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 வரை, 'டி' வலயம் இரவு 7.30 மணிமுதல் 9.00 மணிவரை அமுல் படுத்தப்பட்டுள்ளது.

# ஜே.வி.பியின் ஆதரவு இன்றி எந்த ஒரு கட்சியாலும் ஆட்சி அமைக்க முடியாது

—பிரசார செயலாளர்—

(நமது நிருபர்)

**ஜே.**வி.பியின் ஆதரவின்றி எந்த ஒரு கட்சியாலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவம்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் கட்சி கண்டிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை நாடித்தான் ஆகவேண்டும். அப்போது சில மக்களின் அடிப்படைத் தேவைகளை நிபந்தனைகளாக விதித்து நிறைவேற்ற வழி செய்வோம்.

தற்போது மின்சாரத் தட்டுப்பாடு நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகவுள்ளது. நாட்டில் மின் உற்பத்தியை செய்யக்கூடிய இயற்கை வளங்கள் இருந்தும் அவற்றை அமுல்படுத்துவதில் அரசு பாராமுகமாக இருந்து வருகின்றன. இதனால் பாரிய பொருளாதாரப் பின்னடைவும் ஏற்படுகிறது. புதிதாக ஆட்சி அமைக்கக் கோரும் கட்சியிடம் இவற்றை வலியுறுத்தி நிபந்தனை வழங்குவோம் என்றார்.

# கடலில் மிதந்த அம்மன் சிலை மீனவர்கள் கண்டுபிடிப்பு

(வரதராஜன்)

**ம**ண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு கிராமத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மரத்தினாலான அம்மன் சிலை ஒன்றை கண்டெடுத்துள்ளனர்.

இயந்திரப் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் ஆடைகள் அணிவிக்கப்பட்ட நிலையில் இது மிதந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இச்சிலை புதுக்குடியிருப்பு கடற்கரையிலுள்ள விஷ்ணு ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பெரும் தொகையான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# விபத்தில் கணவன் மனைவி காயம்

(அதிரன்)

**ம**ட்டக்களப்பு மாமாங்கம் மயானப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் ஆரையம்பதியைச் சேர்ந்த 21 வயதுடைய பெண்ணும் அவரது கணவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பன கடும் சேதத்திற்குள்ளானதுடன் மோட்டார் சைக்கிளில் வந்த புன்னைச்சோலையைச் சேர்ந்த இளைஞனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# இருபத்தி நான்கு ஆசிரியர்களுக்கு யுனிசப் மிதிவண்டி அன்பளிப்பு

(ரமேஷ்)

**பா**டசாலைகளில் இடைவிலகல் மாணவர்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

ஓட்டமாவடி பாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஒன்பது ஆசிரியர்களுக்கும் 15 ஆசிரியைகளுக்கும் துவிச்சக்கர வண்டிகள் யுனிசெப் பிரதிநிதி மோனிக்கா மாட்டினால் வழங்கப்பட்டது.

இவ் வைபவத்தில் இத் திட்ட நடைமுறையாளர் என்.எம். நசீர், முன்னாள் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நாகேந்திரம், எம்.ஐ.சேகு அலி, திட்ட மேற்பார்வையாளர்கள் அருளானந்தம், அனந்தராஜா, மற்றும் பாலிகா வித்தியாலய அதிபர் போன்றோர் கலந்து கொண்டனர்.

# மீன்பிடிக்க அனுமதி கோரி வடமராட்சியில் கடற்றொழிலாளர்கள் மறியற்போராட்டம்

**வ**டமராட்சிக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி, சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு கோரி, வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் நேற்று பிரதேச ரீதியில் மறியற் போராட்டத்தை நடத்தினர்.

கடந்த மாதம் முதலாம் திகதி முதல் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கி, தம்மை சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு தாம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்ததாகவும், தமது கோரிக்கையை நிறைவேற்ற கடந்த 19ஆம் திகதிவரை காலக்கெடு விதித்திருந்ததாகவும், தமது கோரிக்கை சம்பந்தப்பட்டவர்களால் புறக்கணிக்கப்பட்டதால் வேறுவழியின்றித் தாங்கள் மறியற் போராட்டத்தில் இறங்க வேண்டியேற்பட்டதாகவும், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் பகல் 10 மணிவரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை சமாச காரியாலயத்தின் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் அதன் பின்னர் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் ஆ.சிவ சுவாமியிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்ததாகவும், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவர் சூரியகுமார் தெரிவித்தார்.

மீன்பிடிக்கத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள மணற்காடு, கற்கோவளம் பகுதி மீனவர்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மீன்பிடிக்க செல்வதில்லை என தீர்மானித்தனர்.

மீனவர்களின் போராட்டத்துக்கு வடமராட்சி வர்த்தகர் சங்கம், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகராட்சி மன்றங்கள் மற்றும் பல தொழிற்சங்கங்கள் முழு ஆதரவு தெரிவித்துள்ளன.

# யாழ்.மாவட்டத்தில் சு.க. போட்டியிடாது

"யாழ்.மாவட்டத்தில் இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடாது. எமது ஆதரவாளர்கள் தங்கள் மனச்சாட்சிப்படி ஏதேனும் கட்சிக்கு வாக்களிக்கலாம்." இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா. கடந்த பொதுத்தேர்தலில் அக்கட்சி வேல்முருகு தங்கராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டது தெரிந்ததே.

# கல்முனை ஆதார வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டது உண்மையா?

—தமிழர் மகாசங்கம் கேள்வி—

(துஷி)

**க**ல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டது உண்மையா? என்ற கேள்வியுடன் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை கல்முனைக்குடி ஆதார வைத்தியசாலையே மத்தியரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அஷ்ரப் தேசிய ஆதார வைத்தியசாலை என பெயர் மாற்றப்பட்டுள்ளதாகவும், வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் குழப்ப நிலையே நீடிக்கின்றது. இப்பேச்சுக்கள் அரசியல் சதுரங்கத்தில் ஓர் அங்கம் என மக்கள் நினைக்கின்றனர். அரச வைத்தியசாலை ஒன்றுக்கு தனிநபரின் பெயர் சூட்டப்படலாகுமா?

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கென கொள்முதல் செய்யப்பட்ட 35 லட்சம் ரூபாய் பெறுமதியான உயரழுத்த தொற்று நீக்கி கல்முனைக்குடி ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டது போல தரமுயர்த்தலும் நடந்து விட்டதா? சம்பந்தப்பட்டவர்கள் தெளிவு படுத்துவீர்களா? உண்மையில் கல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டிருப்பின் மகாசங்கம் மகிழ்ச்சியடையும். அவ்வாறே கல்முனை தமிழ் பிரதேச செயலகமும் தரமுயர்த்தப்பட சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# திருகோணமலை மாவட்டத்தில 2,12,280 பேர் வாக்களிக்கத் தகுதி

**தி**ருகோணமலை மாவட்டத்தில் இம்முறை கடந்த ஆண்டைவிட 5,396 பேர் அதிகரித்துள்ளனர் என திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ரி.ஏ.சீ.என்.தளங்கம மாவட்டத் தகவல் திணைக்களத்திற்குத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தம் 237 கிராம சேவகர் பிரிவுகளை 230 பிரிவாக இணைத்து 219 வாக்கெடுப்பு நிலையங்களுக்கூடாக தேர்தல் நடத்தப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை நடத்திவருவதாக தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்களின் நலனகைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு அண்மித்த கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதாகவும், கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் சில பாதுகாப்பு காரணங்களுக்காக மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேருவில தேர்தல் தொகுதியில் 70 வாக்கெடுப்பு நிலையங்களை அமைக்கவும், திருகோணமலை - I தேர்தல் தொகுதியில் 32 வாக்கெடுப்பு நிலையங்களை அமைக்கவும், திருகோணமலை - II தேர்தல் தொகுதியில் 44 வாக்கெடுப்பு நிலையங்களை அமைக்கவும், மூதூர் தேர்தல் தொகுதியில் 73 வாக்கெடுப்பு நிலையங்களையும் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வடகிழக்கு கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏறாவூர் - 05 கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் நடாத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கின் போது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.யோகேஸ்வரன் குத்துவிளக்கு ஏற்றுவதையும், அருகில் கி.அ.ச.பொருளாளர் கி.உதயேந்திரனையும், கி.இ.ச.தலைவர் எஸ்.சண்முகநாதன் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.




மட்டக்களப்பு வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தினால் நடாத்தப்படும் வாழ்வோசை செவிப்புலனற்ற பாடசாலைச் சிறார்களையும், பராமரிப்பாளர்களையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# இந்திய ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டது

## மூன்று செயற்கைக் கோள்கள் விண்ணில் மிதக்கவிடப்பட்டன

(சென்னை)

இந்தியாவின் பி.எஸ்.எல்.வி ராக்கெட் நேற்று காலை ஸ்ரீ அரி கோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்வெளிக்கு ஏவப்பட்டது. இது இந்த ராக்கெட் வெற்றி கரமாக கரும் புகையை கக்கிக் கொண்டு சீறிப் பாய்ந்தது. குறிப்பிட்ட இலக்கை அடைந்து விட்டதாக விஞ்ஞானிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.


பி.எஸ்.எல்.வி-சி3 என்ற பூமியின் துருவ பாதையில் விட்டு பூமியை சுற்றி வரச்செய்ய முடியும்.

பி.எஸ்.எல்.வி. முதல் ராக்கெட் 1997 செப்டம்பர் 29-ந்தேதி ஏவப் பட்டது. இது ஐ.ஆர்.எஸ்-1 டி என்ற செயற்கை கோளை விண் வெளிப்பாதையில் சுற்ற விட்டது.

2-வது பி.எஸ்.எல்.வி ராக்கெட் 1999 மே 26-ல் கொரியா மற்றும் ஜெர்மன் செயற்கைகோள் மற்றும் இந்தியாவின் ஐ.ஆர்.எஸ் - பி 4 செயற்கைகோளை எடுத்துச் சென்று வெற்றி கரமாக பறக்க விட்டது. இப்போது இந்த வரிசை யில் 3-வது ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டு உள்ளது.

இது குறித்து இஸ்ரோ தலைவர் டாக்டர் கே. கஸ்தூரி ரங்கன் மகிழ்ச்சி பொங்க கூறி யதாவது:-

பி.எஸ்.எல்.வி-சி.3 வெற்றி கரமாக ஏவப்பட்டதன் மூலம் இந்திய ஆகாயத்தில் புதிய நட்சத்திரம் தோன்றியுள்ளது. இன்னும் பல நட்சத்திரங்கள் தோன்றலாம். ஆனால் இந்த நட்சத்திரம் பிறவற்றை விட மிக பிரகாசமாக இருக்கும்.



சென்னை அடுத்த ஸ்ரீஹரிகோட்டா வில் ஏவு தளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி.-3 ராக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்த காட்சியை படத்தில் காணலாம்.

இந்திய விண்வெளியில் உதித்த புதிய நட்சத்திரம் என்று விஞ்ஞானி கஸ்தூரிரங்கன் பெருமிதத்துடன் கூறி னார். விஞ்ஞானிகளின் இந்த சாதனை யை பிரதமர் வாஜபாய் வெகுவாக புகழ்ந்துள்ளார். ராக்கெட்டில் எடுத்து செல்லப்பட்ட 3 செயற்கை கோள்க ளும் திட்டமிட்டபடி பூமி சுற்றுப் பாதையை அடைந்து விட்டன.

இந்திய விண்வெளி ஆரா ய்ச்சி கழகம் (இஸ்ரோ) பி.எஸ்.எல்.வி. சி-3 என்ற ராக்கெட்டை நேற்று காலை 10.23 மணிக்கு சென்னை அருகே உள்ள ஸ்ரீ அரிகோட்டா வில் இருந்து விண்ணுக்கு ஏவியது.

இந்த உந்து ராக்கெட்டில் இந்தியா வின் ரிமோட் ஐ.ஆர்.எஸ். செயற்கை கோள் மற்றும் பெல்ஜியம், ஜெர்மனி யின் இரண்டு செயற்கைகோள்களும் எடுத்துச் செல்லப்பட்டு உள்ளன. இந்த செயற்கை கோள்கள் பூமியின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக விடப்பட்டு விட்டது.

வர்த்தக ரீதியில்.பி.எஸ்.எல்.வி என்பது இந்தியாவின் வர்த்தக ரீதி யிலான செயற்கைகோள் ஏவும் திட்டம் ஆகும். இந்த ராக்கெட்டில் 1200 கிலோ கிராம் எடை கொண்ட செய ற்கை கோள்களை எடுத்துச் சென்று 820 கி.மீ. உயரத்தில்


இன்றைய வெற்றி நாம் சாதனை படைப்பதில் யாருக்கும் இளைத்த வர்கள் அல்ல என் பதை நிரூபித் துள்ளது. கடமையுணர்வுடனும், தியாய உணர்வுடனும் பணியாற்றிய இஸ்ரோ விஞ்ஞானிகள் அனை வரு க்கும் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

பிரதமர் வாஜ்பாய் லட்சு மணபுரியில் நேற்று காலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போது ராக்கெட் வெற்றி பற்றிய செய்தி அவருக்கு தெரிவிக்கப் பட்டது. இந்திய விண்வெளி விஞ் ஞானிகளுக்கு உடனே அவர் பாராட்டு தெரிவித்தார். பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது வருமாறு:-

விண்வெளியில் இந்தியா தனக்காக மட்டும் இன்றி பிற நாடுகளுக்காகவும் பலவகை செயற்கைகோள்களை வெற்றி கரமாக ஏவ முடியும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்தியா உள்நாட்டு தொழில்நுட்ப பரி சோதனைக்காக அனுப்பி உள்ள டெஸ் செயற்கை கோள் நமது தொழில்நுட்பத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஏற்கனவே கொரியா, ஜெர்மன் செயற்கை கோள்களை வெற்றிகரமாக ஏவிய இந்திய ராக்கெட் இப்போது மீண்டும் 2 வெளிநாட்டு செயற்கை கோள்களை வெற்றிகரமாக செலுத்தியுள்ளது. இதன் மூலம் பல ஆயிரம் கோடி செயற்கைகோள் வர்த்தகததில் இறங்கியுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உலக வலம்



பி.எஸ்.எல்.வி. சி-3 ராக்கெட் மூலம் விண்ணில் பறக்கவிடப்படட்ட செயற்கைகோள்களின் ஒரு தோற்றம

# பொலிஸ் அதிகாரிகளுடன் ஜெயலலிதா இரக்சிய சதி, ஸ்டாலின் வெற்றியைத் தடுக்க திட்டம்?

*— கருணாநிதி —*

(சென்னை)

சென்னை மேயர் தேர்த லுக்கான ஓட்டு எண்ணிக்கையில் பயங்கர கலவரம் நடந்தது. ஸ்டா லின் வெற்றியைத்தடுக்க திட்டமிட்டு இந்த கலவரம் நடந்தது என்றும் ஓட்டு எண்ணிக்கையில் அ.தி.மு.க. வினர் தில்லுமுல்லு செய்தனர் என் றும் கருணாநிதி குற்றம்சாட்டி உள் ளார். போயஸ்தோட்டத்தில் போலீஸ் அதிகாரிகளுடன் ஜெயலலிதா பேசி இதற்கான சதித்திட்டம் தீட்டிய திடுக் கிடும் தகவலையும் அவர் வெளி யிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணா நிதி நேற்று இரவு அண்ணா அறிவா லயத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:-

வாக்குச்சாவடிகளை கைப் பற்றுவது பற்றி சில மாநிலங்களின் தேர்தல்களிலே கேள்விப்பட்டிருக்கி றோம். தமிழ்நாட்டில் அந்த புது. வழக்கத்தை அ.தி.மு.க. ஆட்சியிலே ஏற்படுத்தி, அதற்கு போலீசாரும் நல்ல ஒத்துழைப்பு கொடுத்து நடை பெற்ற சம்பவங்கள் எல்லாம் ஏற்கன வே எல்லா பத்திரிகைகளிலும் வந் துள்ளது. இன்றைக்கு என்ன புதுமை என்றால் வாக்குச்சாவடிகளை கைப் பற்றுவதற்கு அடுத்த கட்டமாக வாக் குகள் எண்ணப்படும் சாவடிக்குள் நுழைந்து ஏற்கனவே வெளியிடப் பட்டிருக்கின்ற விதிமுறைகளை யெல்லாம் மீறி அதிகாரிகளின் ஒத்து ழைப்போடு அதிலும் குறிப்பாக பொலிசாரின் ஒத்துழைப்போடு உள்



ளே நுழைந்து வாக்குச்சீட்டுகளை தங்கள் இஷ்டத்திற்கு மாற்றி எண்ணி, இவர்களே முடிவுகளை அறிவிக்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட் டிருக்கின்றது.

இதையெல்லாம் கேள்விப் பட்டு நான் நேற்றிரவே ராஜ்பவ னுக்கு போன் செய்து ஆளுநரின் செயலாளரிடம் பேசினேன். இன்று காலையிலும் இங்கேயிருந்த ஆளு நரிடமும் பேசினேன். பிறகு டி.ஜி.பி. இடமும் பேசினேன். இந்த சூழ்நிலை களையெல்லாம் அறிந்த பா.ஜ.க. மாநில செயலாளர் இல.கணேசன் என்னை தொடர்பு கொண்டு விசாரித் தார். இதற்கு பிறகு கழகப் பொதுச் செயலாளர், பேராசிரியர் மத்தியிலே உள்ளவர்களுக்கு, பிரதமர், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோருக்கு, இங்கேயுள்ள தேர்தல் கமிஷனருக் கெல்லாம் மனு அனுப்பியிருக்கிறார்.

கிண்டி பொறியியல் கல் லூரியில் இரவு ஒரு மணி அளவில் கராத்தே தியாகராஜன் தலைமையில், அவர் போட்டியிட்ட 155வது வார்டு எண்ணுதல் தொடங்குவதற்கு முன்பாக 152வது வார்டுக்கான வாக் குகள் எண்ணத்தொடங்கப்படும் நேரத்தில் உள்ளே நுழைந்து கலாட் டா செய்து, மற்றவர்களையெல்லாம் பயமுறுத்தி வெளியேற்றிவிட்டார்கள். ஆனால் அவருடைய வார்டில் அவர் 500-க்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தி ருந்த போதிலும், அதனை அறிவிக்க விடாமல் தடுத்து இன்று பிற்பகல் வரை காத்திருந்து, பிறகு அவரு டைய அடாவடித்தனம் காரணமாக அதிகாரிகள் அவர் 13 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவித்த அநியாயமும் நடைபெற் றுள்ளது.

இதிலே வேதனையான வேடிக்கை என்னவென்றால், மயி லாப்பூர், வேளச்சேரி, தரமணி, திரு வான்மியூர்-குறிப்பாக மயிலையில் குறிப்பிட்ட ஐந்து வார்டுகள் தி.மு. கழகத்திற்கு அதிகமான வாக்குகள் வரக்கூடிய இடங்கள். அங்கேயெல் லாம் இவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு வாக்குகளை குறைத்து, வார்டு உறுப்பினர்களாக வரவேண் டியவர்களையெல்லாம் வரமுடியாமல் செய்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி காலையில் நாங்கள் தேர்தல் கமிஷனரிடம் தொடர்பு கொண்டோம். செயலாளரிட மும் தொடர்புகொண்டோம். ஆனால் அவர்களால் பார்க்கிறோம் என்று சொல்லத்தான் முடிகிறது. ஆனால் பார்த்தார்களா; என்ன செய்தார்கள் என்று தெரியாது.

# மருத்துவமனை மீது அமெரிக்கா குண்டுவீச்சு; 70 நோயாளிகள் பலி

(ஹீரட், அக்.23-)

ஆப்கானில் மருத்துவ மனை ஒன்றில் அமெரிக்க விமா னங்கள் குண்டுவீசியதில் 70 நோயாளிகள் பலியானதாக தலிபான் கூறியுள்ளது.

மேற்கு ஆப்கானிஸ் தானில் உள்ள முக்கிய நகரம் ஹீரட். தலைநகர் காபூலில் இரு ந்து 570 கி.மீ. தூரத்தில் இது. உள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்த நகரின் மீது அமெ ரிக்க விமானங்கள் சரமாரியாக குண்டு வீசின. நகரத்தின் மையப் பகுதியில் உள்ள மருத் துவமனை கட்டிடம் இடிந்து நொறுங்கியது.

அதில் 50 முதல் 70 நோயாளிகள் வரை பலியான தாக தலிபான் தகவல்துறை அதிகாரி அப்துல் அனன் இமத் கூறியுள்ளார். மருத்துவக் கரு விகள் அனைத்தும் நாசமாகி விட்டதாகவும் அவர் அறிவித்து உள்ளார். தகர்க்கப்பட்ட மருத்து வமனை 100 படுக்கைகள் கொண்டது ஆகும். நேற்று முன் தினம் இரவு ஆப்கானில் உருஸ்கான் மாநில தலைநகரமான திரின் கோட் என்ற நகரத்தின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசின. அதில் 30 கடைகள் மற்றும் வீடுகள் இடிந்து நாச மாகின. குறைந்தபட்சம் 18 பேர் பலியாகி 25 பேர் காயமடை ந்த தாக தலிபான் வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த தாக்குதல் குறி த்து ஆப்கான் தகவல் அதிகாரி இமத் அதிர்ச்சி தெரிவித்துள் ளார். மேற்படி நகரில் எந்த ஒரு ராணுவ முகாமோ தளமோ கிடையாது. இந்த நகரத்தின்மீது அமெரிக்கா ஏன் குண்டுவீசியது என்பது புரியவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

தாக்கப்பட்ட திரின் கோட் நகரம், காந்தகாரில் இரு ந்து வடக்கே 100 கி.மீ. தொலைவில் உள்ளது.

இதனிடையே ஆப் கான் தலைநகரம் காபூல் மீது அமெரிக்கா நேற்றுமுன்தினம் எந்த தாக்குதலும் நடத்த வில்லை. காபூல் மீது போர் விமானங்கள் நேற்று 2 முறை பறந்து சென்றன. ஆனால் குண்டுவீச வில்லை. காபூலில் முழு அமைதி நிலவியது.

நேற்றுமுன்தினம் இங்கு அமெரிக்கா நடத்திய குண்டு வீச்சில் 4 சிறுவர்கள் 3 பெண்கள் உள்பட 13 பேர் பலியானார்கள். இந்த சம்ப வத்தை அடுத்து குண்டு தாக்கு தலை அமெரிக்கா தற்காலி கமாக நிறுத்தியிருப்பதாக கருத ப்படுகிறது.



பாகிஸ்தானுக்குள் அகதிகள் ஓடி வரும் காடட்சி

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் ஒழிக்கப்படவேண்டும்

(மாறன்.யூ.செயிர்)

பக்கச்சார்பின்றி உண்மைகளைப் பிரதிபலிக்கின்ற பத்திரிகைகளின் செய்தியாளர்கள் தகவல் ஊடகங்களின் தகவலர்கள் என்போர் மீது ஒருசில தீய சக்திகள் தொடுக்கின்ற ஒடுக்கு முறைகளும், அரசியல் ஆதிக்க வெறியர்களின் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களும் எழுத்துச் சுதந்திரங்களுக்கும் இந் நாட்டின் எதிர்கால முன்னேற்றங்களுக்கும் எதிராகத் தொடுக்கின்ற ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையே ஆகும்.

அவ்வப்போது செய்தியாளர்கள் பத்திரிகைகளையும், தகவலர்கள் ஊடகங்களையும் அச்சுறுத்தல் செய்வதும், அடாவடித்தனங்கள் மூலம் அடக்கி ஒடுக்க எண்ணுவதும் இந்நாட்டு மக்களின் சுதந்திரத்திற்கே ஆபத்தாகும்.

இவ்வாறு சம்மாந்துறைப் பகுதியைத் தளமாகக் கொண்டியங்கும் 'சர்வதேசிய கிழக்கின் மக்கள் சக்தி' அமைப்பின் தேசிய முதல்வர் மாறன் யூ.செயின் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த நாட்டில் இயங்கும் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஊடகங்கள் மீது எந்தவொரு காரமான விமர்சனங்களும் எழுந்துவிடக்கூடாது. கண்டனங்கள் எழுந்துவிடக் கூடாது என்பதில் எப்போதும் கவனமாக இருக்கின்றன. ஆட்சியில் இருக்கின்ற அரசியல் கட்சியும் எழுகின்ற விமர்சனங்கள், கண்டனங்களில் எப்போதுமே அவதானமாக, கடுமையான விமர்சனத்திற்குரிய செய்திகள், தகவல்கள், கண்டனங்கள் ஏதாவது வந்துவிட்டால் போதும். செய்தியாளர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் சித்திரவதைகள்தான்.

செய்தியாளர்கள், பத்திரிகைகள், தகவலர்கள், ஊடகங்கள், படப்பிடிப்பாளர்கள், படப்பிடிப்பு நிலையங்கள் என்பன அவ்வப்போது தடை செய்யப்பட்ட சம்பவங்கள், தாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளது. இவை தொடர்ந்தும் இடம் பெறாதிருப்பதற்குரிய எந்த ஒரு நடவடிக்கையும் உருப்படியாக எடுக்கப்பட்டதாக இல்லை. இந்தத் துரதிஷ்ட நிலையை எந்தவொரு பிரஜையும் அனுமதிக்க முடியாது.

இந்நாட்டின் அனைத்துத் துறைகளையும் அக்குவேறு ஆணிவேறாகப் புடம்போடும் ஊடகங்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளது.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



மட்/ஆரையம்பதி ஆர்.கே.எம். பாடசாலை மாணவி சிவலிங்கம் நிவேதிக்கா அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

## எட்டாவது சர்வதேச கூட்டுறவு விழா

(நமது நிருபர்)

மண்முனைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எட்டாவது சர்வதேச கூட்டுறவுச் சங்கத்தின் எட்டாவது சர்வதேச கூட்டுறவு தினவிழா அண்மையில் மண்முனைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் இ.குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் வ.பேரின்பம், கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.புவனேந்திரன், மட்.மாவட்டச் செயலாளர் க.கீர்நிலமே, கல்வி உத்தியோகத்தர் வீ.கே.ரவீந்திரன் ஆகியோர்களும் கலந்து கொண்டனர். மேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் சி.நசிவ்காந், ''கூட்டுறவும் செயற்பாடும்'' எனும் தலையங்கத்தில் கருத்துரை வழங்கினார். மற்றும் சங்கத்தின் பொது முகாமையாளர், பணியாளர்களும் சிறப்புரை வழங்கினர்.

# பொ.ஐ.முன்னணியிலிருந்து மேலும் பலர் வெளியேற்றம்

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து மேலும் பல பிரமுகர்கள் வெளியேறி வருகின்றனர்.

அவர்கள் ஐ.தே.கட்சியில் அல்லது எஸ்.பி.திஸநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா தேசாபிமான விடுதலை முன்னணியில் இணைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த மாத்தறை மாநகர மேயர் சுகத் அந் தரமன தமது பதவியை நேற்று இராஜினமாச் செய்துவிட்டு ஐ.தே.கட்சியில் இணைந்தார்.

ஊவா மாகாண முதலமைச்சர் சமரவீர வீரவன்னியும் பொ.ஐ.முன் னணியிலிருந்து வெளியேறுகின்றார். அவர் ஐ.தே.கட்சியில் சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய மாகாண அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹொரவபொத்தான தொகுதி அமைப்பாளருமான பி.திஸநாயக்கா தமது பதவிகளை இராஜினமாச் செய்துள்ளார். அவரும் அநேகமாக ஐ.தே. கட்சியிலேயே சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பலர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து அடுத்த ஓரிரு தினங்களில் வெளியேறுவர் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் புத்திர சிகாமணி அக்கட்சியிலிருந்துவிலகி, நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி முன்னிலையில் பொ.ஐ. முன்னணியில் இணைந்ததாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்.மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயார்

நான்கு கட்சிக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் பொது வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெறுகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் யார் என்று ஓரளவு உறுதியாகிவிட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, எஸ்.சிவமகராஜா மற்றும் யாழ். மாநகரசபை மேயர் ந.ரவிராஜ், மாநகரசபை உறுப்பினர் எஸ்.அரவிந்தன், முன்னாள் சங்கானை பிரதேச செயலாளர் கா.சந்திரராஜா, வி.ஜி.தங்கவேல் ஆகிய ஏழு பேர் கொண்ட பட்டியல் இறுதியாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

## மீனவர் போராட்டத்துக்கு பல்கலை மாணவர் ஆதரவு

அரசியல் கட்சிகளின் தலையீடின்றி முன்னெடுக்கப்படும் வடமராட்சி கடற்பகுதியில் கடற்றொழிலாளர்களினால் மீனவர்களின் போராட்டங்களுக்குத் தமது ஆதரவு தொடரும் என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடற்றொழிலுக்குச் செல்லும் தமிழ் மீனவர்கள்மீது படையினர் நடத்தும் அடாவடித்தனங்கள் தொடர் கதையாகவே உள்ளன. கடல் வலயத் தடைச்சட்டத்தின் மூலம் மீன்பிடிக்கும் கடற்பகுதிகளை மட்டுப்படுத்தியும், இயந்திரப் படகு களைப் பயன்படுத்தத் தடை விதித் தும் பல கெடுபிடிகளுக்கு மீனவர்களை உள்ளாக்கியுள்ளனர்.

இதனைச் சாதகமாக்கிய அரசியல் கட்சிகளும் அந்த மக்களில் அக்கறையுள்ளவர்கள் போன்று காட்டிக்கொண்டு, அந்த மக்கள் தம்மிடம் தொடர்ந்து கையேந்திக்கொண்டிருக்கக் கூடியவாறு, அகதி வாழ்வையே வாழக்கூடியவாறு, நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் தம்மையே கண்கண்ட தெய்வமாக நினைக்கக் கூடியவாறு, நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதில் மும்முரமாக நிற்கின்றனவே தவிர. கடல் வலயத் தடைச் சட்டத்தினை நீக்கி அம்மக்களின் வாழ்வுப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண விரும்பவில்லை.

இம்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக மீனவ சமூகம் முன்னெடுத்துள்ள இப்போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவதோடு, எந்த அரசியல் கட்சிகளினதும் தலையீடின்றி முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் வழங்குவோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வளர்ப்பு நாய்களுக்கு மருந்தேற்றல்

வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் வளர்ப்பு நாய்கள் அனைத்திற்கும் விசர் நோய் ஏற்படாமல் தடுப்பு மருந்தேற்றும் நிகழ்வு எதிர்வரும் 25ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே வளர்ப்பு நாய்களுடன் ஞானசூரியம் 2ம் குறுக்கில் அமைந்துள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்திற்குக் காலை 9.00 மணிக்கு சமூகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# ஆசிரியர் பயிலுனர்கள் பரீட்சை எழுதியும் பெறுபேறு இல்லை

(அதிரன்)

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பயிலுனர் ஆசிரியர்களை உள்வாங்குவதற்கென விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இவ்வேளையில் கடந்த வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இறுதிப் பரீட்சை எழுதி இதுவரை முடிவுகள் வெளியிடப்படவில்லை.

இவ்வாறு முடிவுகள் வெளியிடப்படாமை காரணமாக புதிதாக பயிலுனர் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வது முடியாதுள்ளது எனத் தெரியவருகிறது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பரீட்சை முடிவுகள் வருடாவருடம் முதலாம் மாதம் 10ஆம் 15 ஆம் திகதிகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டு வந்தது. எனினும் இம்முறை இப்பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

க.பொ.த.சாதாரணதர, உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நான்கு மாதங்களில் வெளியிடும் ஆசிரிய பயிலுனர்களின் தொழில்வாண்மை தொடர்பாக நடாத்தப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி இறுதிப் பரீட்சை முடிவுகள் இவ்வாறு 10 ஆம் மாதங்களின் பின்னர் வெளியிடப்படுவது மிகவும் வேதனைக்குரியது என்றும் இது தொடர்பாக கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து விரைவாகப் பரீட்சை முடிவுகளை வெளியிட வேண்டும் எனவும் ஆசிரிய மாணவர் ஒருவர் தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

## அம்பாறையில் இரு தமிழ் பிரதிநிதிகள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து தமிழ் மக்களும் தமிழர் கூட்டு முன்னணிக்கு வாக்களித்தால் இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்முனை மத்தியகுழு உறுப்பினர் மு.மயில்வாகனம் தெரிவித்தார்.

பொது மக்களின் நலனில் அக்கறையுள்ள பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் இம் மாவட்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் எனவும் கூறினார்.

### அடையாள அட்டை கண்டெடுப்பு

கல்லடியைச் சேர்ந்த கார்த்திகேசு தியாகராசா என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தினக்கதிர் காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## கல்வியல் கல்லூரி வேலைகள் 2002 இல் முடிவுபெறும்

(மண்முனைப்பற்று நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தாளங்குடா கிராமத்தில் தற்போது அமைக்கப்பட்டு வரும் தேசிய கல்வியல் கல்லூரிக்குச் சுமார் 30 கோடி ரூபா உலக வங்கி நிதி ஒதுக்கீட்டின் பெயரில் சுமார் 42 பாரிய கட்டிடங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டிடங்கள் அனைத்தும் எதிர்வரும் 2002 மார்கழி மாதத்திற்கு முன்பே அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும், இக் கட்ட அமைப்பிற்குப் பொறுப்பான பொறியியலாளர் க.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மற்றும் இத் தேசிய கல்வியல் கல்லூரி பூர்த்தியானதன் பிற்பாடு கிழக்கு மாகாணத்தில் இருந்து கல்விக் கல்லூரிக்கு செல்லும் மாணவர் தொகையும் கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



சித்தாண்டி விநாயகர் கிராமத்தின் பாலர் பாடசாலையின் சுற்று வேலியினை ஏறாவூர்ப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜம் சிரமதானம் மூலம் அமைப்பதைப் படத்தில் காணலாம். இதற்கான நிதியுதவியை வேள்ட் விஷன் வழங்கியிருந்தது. (வந்தாறுமூலை நிருபர்)

# தமிழ் உணர்வும் இளமைத்துடிப்புமுள்ள வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும்

இலங்கையின் 11வது பாராளுமன்றம் கூடி சரியாக ஒரு வருடமே திரும்பவும் கலைக்கப்பட்டு, மீண்டும் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஆயத்தமான நிலையில் மக்கள் அனைவரும் யாரை நாம் தேர்ந்தெடுப்பது, யாருக்கு வாக்களிப்பது என்று பதற்றமடைந்த நிலையில் இருக்கி ன்றனர். சென்ற பாராளுமன்ற தேர்த லில், இதற்கு முன்பிருந்தே ஆட்சி பீடத்தை தக்கவைத்து இருந்த சில சுயநல அரசியல் வாதிகளை நாம் மீட்டிப்பார்க்கும்போது இவர்கள் எமக்கு என்ன செய்தார்கள்? எமது மண்ணுக்கு என்ன செய்தார்கள்? எமது இனத்திற்கு என்ன செய்தார்கள் என்ற கேள்விகள் தமிழ் மக்களாகிய நம் அனைவரின் மனங்களிலும் எழுகின்றன.

ஏன் இவர்கள் இப்படியான வேலையைச் செய்தார்கள் என்றால் அவர்களின் வயது அப்படியான பழுத்த வயது. இது ஏன் என நாம் ஓர் முறை கேள்வி எழுப்பிப் பார்ப்போம். இவர்களின் கண் மூடும் முன்பே தமது சொந்த பந்தங்களுக்கு செய்வதை எல்லாம் செய்து விடுவோம் என்று எண்ணிய சுயநல அரசியல் வாதிகள் வேலைவாய்ப்புகளையும், வெளிநாட்டு வசதிகளையும் தங்கள் உறவினருக்கு அமைத்துக் கொடுத்துள்ளனர். இப்படியான ஓர் தேர்தல் வரும்போதே மக்களிடம் கேட்பார்கள் உங்கள் தேவை என்ன என்று இப்படி ஓர் தேர்தல் இல்லை என்றால் மக்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதைக் கூட தெரியாமல் இருந்திருப்பார்கள். இப்படியான அரசியல்வாதிகளை நாம் இம்முறை மறந்து விடுவோம்.

இலங்கையின் 12வது பாராளுமன்றத்தில் ஓர் புதிய அரசியலை உருவாக்க மக்கள் ஒன்று திரண்டுள்ளனர். மக்களின் உரிமைகளை எல்லாம் பணத்திற்கு விற்ற காலம் போய் இப்பொழுது தமிழ் உணர்வு எம்மண்ணில் எங்கும் விதைக்கப்பட்டு உள்ளது. அந்த உணர்வை எந்த சுயநலவாதிகளாலும் அறுவடை செய்ய முடியாது என்று அறுதியும் உறுதியுமாகக் கூறி கொள்கின்றோம்.

இம்முறை புதிய சரித்திரம் ஒன்றை படைக்க தமிழர்கள் யாவரும் ஒன்றுபட்ட நிலையில் சிறந்த தமிழ் உணர்வுள்ள தமிழுக்காக உயிரைக் கொடுக்கக் கூடிய துடிப்புள்ள ஓர் இளைஞர் சமுதாயத்தை தேர்தலில் குதிக்கச் செய்வோம். அப்படியான ஓர் நிலையில் தான் எமது தமிழ் ஈழ மண்ணில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் வெற்றியின் வெடியோசை கேட்கும் வேளையில், பாராளுமன்றத்தில் எதிரொலிக்க வேண்டும். இந்த வெற்றியின் வெடியோசை, அப்படியானால் ஓர் இளைஞர் சமுதாயத்தாலேயே சாத்தியமாக முடியும். இல்லை என்றால் பழைய குருடி கதவைத்திறடி என்பதைப் போல் ஆகிவிடும். உண்மையில் பாராளுமன்றத்தில் ஒலிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் தமிழ் உணர்வு தமிழ் மண், தமிழ் ஈழம் என்ற உண்மையான ஓர் உணர்வுடன் ஒலிக்குமானால் அது எமது இனத்தின் ஓர் சரித்திரமாகவே இருக்கும். இப்படியான ஓர்புதிய சரித்திரம் ஒன்றை படைக்க எமது இனம் துணிந்துள்ள நிலையில் மக்களுக்காக வாழந்து மக்களோடு மடிய தயாராகும் ஒருவரை இம்முறை பாராளுமன்றம் அனுப்புவோம்.

**திருமலைவீதி வாகரை**
**ஏ.யூலியன்**

## தேர்தல் கள கருத்தரங்கு

குறுகிய கால இடைவெளிக்குள் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை நாம் எதிர்கொள்கிறோம். சென்ற தடவை மக்களிடம் வந்து வாக்குக் கேட்டவர்கள், தாம் சொன்னதைச் செய்தார்களோ, இல்லையோ, மீண்டும் வாக்குக் கேட்டுப் புறப்படத் தயாராகிவிட்டார்கள்.

எனவே, மக்களுடைய பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் செல்லத் தயாராகும் இவர்கள் குறித்து, மக்கள் தம்முடைய அபிப்பிராயங்கள், கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லத் துணிய வேண்டும்.

அதற்காக இப்பக்கத்தை எமது வாசகர்களுக்கென ஒதுக்கியுள்ளோம். இனி இது உங்கள் பக்கம். உங்கள் கருத்துக்களை எழுதியனுப்புங்கள்.

-ஆசிரியர்-

# ஐ.தே.க. தேசிய பட்டியில் மட்டு பிரதிநிதிக்கும் வழங்க வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஐ.தே.க சார்பில் தொடர்ச்சியாக அங்கத்தவர் தெரிவு செய்யப்படுகின்றன.து. பரிட்மீரா லெவ்வையின் காலத்தில் இருந்தே தமிழ் வாக்குகள் ஐ.தே.க மட்டக்களப்பு தொகுதியில் இருந்து பெறப்பட்டன. கே.டபிள்யு.தேவநாயகம், கல்குடா தொகுதியில் இருந்தும் இரண்டு அங்கத்தவர்களை தமிழ் முஸ்லிம் வாக்குகள் மூலம் மட்டக்களப்பு மாவட்டம் பாராளுமன்றம் அனுப்பியது. முஸ்லீம் காங்கிரசின் தோற்றத்துக்கு பின், கணிசமான முஸ்லீம் வாக்குகள் ஐ.தே.க இழந்தது. பெரும்பான்மை தமிழ் வாக்குகள் மூலம், ஐ.தே.க மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஒரு முஸ்லீம் அங்கத்தவரை பாராளுமன்றம் அனுப்புகின்றது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் வாக்குகளை ஐ.தே.க கணிசமான அளவு வழங்கப்பட்டும் இம் மாவட்டத்தில் இருந்து தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதில்லை. ஐந்து தமிழர்களும் மூன்று முஸ்லீம்களும் போட்டி இடு வதால், ஐந்து தமிழ் வாக்குகளும் பிரிவடைகின்றன. இந்நிலை தொடர்ந்து கொண்டிருக்கும்போது ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்கும் தமிழர் பற்றி ஐ.தே.க கவனம் செலுத்துவதில்லை. எனவே ஐ.தே.க மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு தமிழரை தேசிய பட்டியலுக்கு நியமிக்க வேண்டும். இது ஐ.தே.க மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு செய்யும் மிகப் பெரிய கடமையாகும். ஐ.தே.க மட்டக்களப்பு மாவட்டத்தில் வளர்ச்சி அடைந்து வருவது வாக்குகளின் எண்ணிக்கையின் ஏறுமுகம், எடுத்துக் காட்டும் போது ஏனோ தானோ போக்கு கைவிடப்பட்டு தேசிய பட்டியல் மூலம் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் ஒரு வரை நியமிக்க நடபடிக்கை எடுக்க வேண்டும் என்பது ஐ.தே.க ஆதரவாளர்களின் ஏகோபித்த கோரிக்கையாகும்.

# யுத்த சூழலில் தேர்தல் வாக்களிப்பு சாத்தியமாகுமா?

தமிழ் மக்கள் இலங்கை அரச படைகளால் பல்வேறுபட்ட தொல்லைக்குள்ளான யுத்த சூழலில் மேலும் ஒரு தேர்தலை சந்திக்கப்போகின்றனர். சந்திரிக்கா வும் அவர் அரசாங்கமும் பல்வேறு பட்ட வாக்குறுதிகளை கடந்த கால தேர்தலில் வழங்கி இருந்தனர். முழு பூசணிக் காயை சோற்றில் மறைக்க முற்பட்ட சந்திரிக்கா அரசு பல்லின மக்களையும் கவரக் கூடிய விதத்தில் வாக்குறுதிகளை பொழிந்திருந்தார். நீண்ட யுத்தத்திற்கு முடிவு கட்டி சமாதானத்தை கொண்டுவர அவர் சமாதான புறாக்களை உலாவ விட்டார். வீதி நாடகங்களை நடத்தி மலரும் சமாதானத்துக்கு கட்டியம் கூறினார். ஐ.தே.க கொள்கைகளையும் தனது கொள்கைகளையும் கலந்து சாம்பாராக்கி நாட்டில் பொருளாதாரத்தை அதல பாதாளத்துக்கு கொண்டு சென்று இறுதியில் பாராளுமன்ற ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க முற்பட்டார். யுத்தம் முடிவுக்கு வரும் என்ற நப்பாசையில் மக்களை ஏமாற்றி பெற்ற வாக்குகளால் அதிகாரத்தை பிடித்துக் கொண்டு எதை சாதிப்பது என்று புரியாத தர்மசங்கடத்தில் மீண்டும் ஒரு தேர்தலை சந்திரிகா அரசு எதிர் நோக்குகின்றது. இத்தேர்தல் ஒரு வித்தியாசமான சூழ்நிலையை தோற்று வித்திருக்கின்றது. தமிழ் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் சேர்த்து ஆட்சியமைக்க தயாராகும் ஐ.தே.கயின் பக்கம்

**நாவலூர்**
**சில் செல்வம்**

பொதுஜன ஐக் கிய முன்னணியின் அமைச்சர்கள் சங்கமமாகி கொண்டிருப்பதும் நாட்டில் தோன்றியுள்ள சமாதான தேவையும், மக்களை ஐ.தே.கட்சியின் பக்கம் இழுத்து செல்வதை ஆளும் தரப்பு அமைச்சர்களின் வருகை படம் பிடித்து காட்டுகின்றது.

எவ்வழி பட்டும் சந்திரிகா அரசை தோற்கடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவே நடைபெறப்போகும் பொது தேர்த லாகும். வடகிழக்கு தமிழ் பகுதியில் எதையும் சாதிக்காத நிலை யில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்ட நிலையில் மேலும் ஒரு தேர்தலில் கதிரை கட்சி மக்கள் முன் செல்வது முடியாத காரியமே. இதை விட வாக்குரிமை என்பது சுதந்திரமானதும், உரிமை யானதும் ஆகும். யுத்த சூழலில் அமைக்கப்படும் கொத்தணி வாக்கு சாவடிகள் முறையானவாக்களிப்பை வழங்கப்போவதில்லை. தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுமா என்பது கேள்வி குறியே?

# குலதெய்வ வழிபாட்டு முறையை பிரதிபலிக்கும் பால்சேனை பெரிய சுவாமி கோயில் வழிபாடு

மட்டக்களப்பு இந்து மக்கள் மத்தியில் இரு வகையான மரபு வழிபாட்டுமுறைகள் உள்ளன. ஆகம விதி முறைப்படி அமைந்துள்ளதான ஒரு வழிபாட்டு முறையும் ஆகம விதி முறைகளுக்கு அப்பாற்பட்டதான 'பத்தாசி' வழிபாட்டு முறையும், என இரு பிரிவுகள் உள்ளன ஆகம விதிமுறைகளுக்கு அப்பாற் பட்ட வழிபாட்டுமுறையாக கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறையில் தேர்திருவிழாக்கள் இல்லாது ஆடம்பரமற்ற மிக எழிதான வணக்க முறைகள் கையாளப்படுகின்றன. கும்பம் வைத்தல் பழம் வெற்றிலை பாக்குவைத்தல் பூ மடைவைத்தல் சக்கரைப் பொங்கலிடுதல், முதலியவற்றை உள்ளடக்கியுள்ளன.

குல தெய்வங்களாகவும், காவல் தெய்வங்களாகவும் உள்ள இவ் வழிபாட்டு முறையில் ஆலயங்கள் பெரிய கட்டிடங்களையோ, கோபுரங்களையோ கொண்டிராமல் வயல் வெளிகள் கடற்கரைகள் காட்டுப் பிரதேசங்கள் மலைப் பிரதேசங்கள் கிடேயோரங்கள் ஆகிய வற்றில் காட்டுக்கம்புகளால் தற்காலிகப்பந்தல் அமைத்து பூசாரிமார்களாலோ அல்லது கப்புகன் மார்களாலோ அல்லது வழி படுவதற்குச் செல்பவர்களாலோ, பூசைகள் என்றும் சடங்குகள் என்றும் செய்யப்படுகின்றன.

ஸ்ரீ பெரியசுவாமி வழிபாட்டு முறையானது, மட்டக்களப்பில் மாத்திரமின்றி வன்னி, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலும் சிறிய அளவில் புத்தளம் குருநாகல், மலையகம் ஆகியவற்றிலும் இன்று வரையிலும் காணக்கூடிய தாயுள்ளது

மட்டக்களப்பின் வடக்கே வாகரைக்கும் கதிரவெளிக்கும் இடை நடுவில் அமைந்துள்ள பால்சேனைக்கிராமத்தில் கடற்கரையோரமாக கோயில்கொண்டருளியுள்ள ஸ்ரீ பெரியசுவாமி இந்தியாவின் சென்னைப் பட்டின நாகபடின

**தாழை செல்வநாயகம்**

த்திலிருந்து கி.பி.32ம் ஆண்டில் கப்பல் மூலமாக கடல் வழியாக யாழ்ப்பாணம் கொக்குவில் ஆகிய கிராமங்களுக்குச்சென்று அங்கு கோவில் கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தினால், தொடர்ந்தும் பல இடங்களைத் தாண்டி பனிச்சங்கேணித் துறையினை அடைந்து அங்கும் தனக்கு ஏற்ற சூழ்நிலையில்லாத காரணத்தினால் தொடர்ந்து கட்டுமுறிவு, வாகரை,போன்ற பகுதிகளையும் பார்வையிட்டு, இறுதியாகக் கதிரவெளி முகத்துவாரத்தினை கப்பல் சென்று கரை தட்டியது.

அப்போது சூழவுள்ள காட்டில் தேன் சேகரிப்பதற்காகச் சென்றிருந்த பால்சேனையைச் சேர்ந்த வேடர்கள் தண்ணீர் தாக மேலீட்டால், தண்ணீரெடுப்பதற்காக காட்டை விட்டு வெளியேறியபோது கடற் கரையில்தரித்து நின்ற கப்பலையும் அதில் ஆடம்பரமான முறையில் கோட்டும் சூட்டும் தொப்பியும், அணிந்து சிவப்பு பச்சை வர்ணங்கள் ஜொலிக்க கையில் துப்பாக்கியுடனும் நின்று கொண்டிருந்த பெரிய சாமியினையும் அவரது சீடர்களையும் கண்டு, பயத்தின் காரண மாக ஓட்டம் எடுக்க எத்தனித்தனர்.

கணப்பொழுதில் அதனைப் பார்த்துவிட்ட பெரியசாமி ஓட வேண்டாம்... இங்கே பாருங்கள்... உங்களுக்கு ஏற்படும் நோய், பிணி துன்பங்களை நீக்கி நன்மைகள் செய்வதற்காகவே நாங்கள் வந்துள்ளோம்' என்று பெரியசாமி கூற, அவர்கள் பயத்தின் காரணமாக நடு நடுங்கிக் கொண்டு அவரிடம் வந்தனர். உங்கள் ஊர் எது? உங்கள் ஊரின் தலைவன் யார்? என்ற விபரங்களை கூறுமாறு பெரியசாமி கேட்க....

நாங்கள் 'பாலச்சேனை' என்ற கிராமத்தினைச் சேர்ந்தவர்கள். எங்கள் பூமியில் நிலத்திற்குக் கீழ் கற்பாறைகள் உள்ளன. இதனால் எங்கள் நிலம் பயிர் செய்வதற்கு ஏற்றதாகவில்லை. இதனால் நாங்கள் சிறுசேனைப்பயிர்கள் செய்து கொண்டும், தேன் எடுத்துக் கொண்டும் எம் சீவியத்தை நடத்துகின்றோம். எங்களுக்குப் போடிமார்கள் தான் தலைவர்களாயுள்ளனர். அவர்களது சொற்படிதான் நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்தக் காட்டில் சேகரித்துச் செல்லும் தேன் கூரைகளையும், அவர்களிடம் கொடுத்தால், அவர்கள் அதனை விற்று, அவர்கள் அதற்குப் பெறுமதியான உணவுகள் உடைகள் போன்ற வற்றினை எங்களுக்குத் தருவார்கள் என்று பணிவுடன் கூறினர்

அப்பொழுது பெரியசாமி எங்களுக்கு இப்போது பசியாக விருக்கின்றது. உங்களில் ஒருவர் எங்களுடன் இருக்க மற்றையவர்கள் போய் உங்கள் போடிமார்களிடம் நடந்த சம்பவங்களை அறிவித்து அவர்களைக் கூட்டிவந்து எங்களுக்குப் பச்சைக் காய்கறி சமைத்து சாதம் தரவேண்டும் என்று கூறினார்

வேடர்கள் ஓடிப்போய் ஊர் போடிமார்கள் நான்கு பேரிமும் நடந்த சம்பவங்களைக் கூறி சமையல் செய்வதற்குத் தேவையான வேலையாட்களையும் கிடாரம் முதலிய பாத்திரங்கள் உரிய மரக்கறிகளையும் மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு பெரியசாமி கப்பலில் வந்திறங்கிய கடற்கரையினை அடைந்தனர்.

(தொடரும்...)




# கிரிக்கட் சுற்றுப் போட்டி ஆரம்ப விழா

(யூ.எஸ்.சபீல்)

மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தின் மறைந்த ஒலிம்பிக் கழகத்தின் செயலாளர் மர்ஹூம் எஸ்.எம்.றபியுதீன் ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் மர்ஹூம் ஏ.எம்.நிஹ்மதுல்லா ஞாபகார்த்த அணிக்கு 11பேர் கொண்ட 10 ஓவர்கள் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆரம்பவிழா கடந்த 19ம் திகதி மருதனை மகுர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பப் போட்டியில் மருதமுனை டொக்ஸா-கிறிஸ்டல் அணிகள் மோதின. போட்டியில் முதலில் துடுப்பாடிய கிறிஸ்டல் அணி 10 ஓவர்களில் 52 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது. கிறிஸ்டன் அணி சார்பாக அஸ்மி 10, கியாஸ் 09 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பாடிய டொக்ஸா அணி 9.2 ஓவர்களில் 08 விக்கட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

இத்தொடரில் மொத்தமாக 16 அணிகள் பங்கு கொள்கின்றன. இவ் அணிகள் 04 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 04 அணிகள் இடம் பெறுகின்றன. முதல் சுற்று புள்ளி அடிப்படையில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் கால் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும். கால் இறுதிப் போட்டியுடனான இரண்டாம் சுற்று நொக்வவுட் அடிப்படையில் நடாத்தப்படும்.

சுற்றுப் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படும். மேலும் தொடரின் சிறப்பாட்டக்காரர், இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரர் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

# அதிக வருவாயை பெற்றுக் கொடுத்த ஒலிம்பிக் போட்டி

**ஒலிம்பிக் நினைவுகள் - 44**

(எம்.ஐ.எம்.முஸ்தபா)

லோஸ் ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக்கில் பங்குபற்றிய நாடுகள் 141 சர்வதேச ஒலிம்பிக்கமிட்டியில் பதிவு செய்யப்பட்ட நாடுகளின் தொகை 159 சோவியத் யூனியன், ஆப்கானிஸ்தான், அங்கோலா, பல்கேரியா, கியூபா, செக்கோஸ் லேவேகியா, எதியோப்பியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, வடகொரியா, லாவோஸ், மொங்கோலியா, போலந்து, வியட்னாம், தென்யேமன், அல்பேனியா, ஈரான் ஆகிய நாடுகள் பங்கு பற்றவில்லை. 1972 மூனிச் ஒலிம்பிக்கில் 122 நாடுகள் கலந்து கொண்டன. ஆகக் கூடிய நாடுகள் கலந்து கொண்ட ஒலிம்பிக் லோஸ்ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக் ஆகும். இந்த ஒலிம்பிக்கில் கூடுதலான இலாபம் பெறப்பட்டதாக ஒலிம்பிக் அமைப்புக்குழுத் தலைவர் பீற்றர் யூபிரோத் தெரிவித்தார். இந்தப் பணத்தின் ஒரு பகுதி விளையாட்டு அமைப்புக்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒலிம்பிக் வரலாற்றில் கூடுதலான பார்வையாளர்களைக் கவர்ந்த ஒலிம்பிக் இதுவாகும். லோஸ்ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக் பற்றி பலதரப்பட்ட கருத்துக்களும் விமர்சனங்களும் எழுப்பப்பட்டன. சோவியத் பிராவதா பத்திரிகை அரசியல் நிறைந்த ஒரு பக்க விளையாட்டு என வர்ணித்தது. சோவியத் யூனியன் அதன் பக்க நாடுகளின் பகிஸ்கரிப்பால் போட்டிகளின் பெறுமதி இழக்கப்பட்டுள்ளது என மற்றுமொரு பத்திரிகை கருத்து வெளியிட்டது. அமெரிக்கா அரசியல் ஆதாயம் பெறுவதற்காக ஒலிம்பிக்கைப் பயன்படுத்துகின்றது என செக்கோஸ் லேவேகியா குறிப்பிட்டது.

மொஸ்கோ ஒலிம்பிக்கை அமெரிக்காவும், லோஸ்ஏன்ஜல்ஸ் ஒலிம்பிக்கை ரஸ்யாவும் பகிஸ்கரித்த போதும். இரு நாடுகளும் சியோலில் ஒன்று கூடட்டும் என அவுஸ்திரேலிய பத்திரிகையான 'சண்' எழுதியது பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்த ஒலிம்பிக்கை பாராட்டி எழுதின. இந்த ஒலிம்பிக்குக்காக லோஸ்ஏன்ஜல்ஸ் மக்களிடமிருந்து ஒரு சதமேனும் அறிவிடப்படவில்லை.

தனிப்பட்ட இயக்கங்களிடமிருந்து பணம் சேகரிக்கப்பட்டன. ஒழுங்குக்குழுத்தலைவர் பீற்றர் யூபிரோத் பிரபல வர்த்தக பிரமுகர். அவரின் திறமையாலும், அனுபவத்தாலும் இப்போட்டி சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டிக்கு கூடியளவு பணச் செலவை குறைப்பதே அவரின் நோக்கமாக இருந்தது. 1932ல் லோஸ்ஏன்ஜல்சில் ஒலிம்பிக் போட்டி இடம் பெற்றது அப்போது கட்டப்பட்ட கட்டிடங்கள், வசதிகளை பயன்படுத்தியதோடு மேலதிகமான வசதிகளும் செய்யப்பட்டன. இதனால் செலவும் ஓரளவு குறைக்கப்பட்டன. லோஸ் ஏன்ஜல்சிஸ் வீரர்களுக்கு தேவையான வசதிகள் ஒழுங்குகள் யாவும் திருப்தியாக இருந்தன. எந்தப் பெரிய பிரச்சினைகளும் இன்றி விழா சிறப்பாக நடைபெற்றது. சர்வதேச ஒலிம்பிக்கமிட்டித்தலைவர் ஜீவான் சமரஞ்சின் வழிகாட்டல் போட்டியின் வெற்றிக்கு ஒரு காரணமாக இருந்தது.

# முக்கோண கிறிக்கட், கென்யாவிடம் இந்தியா அதிர்ச்சித் தோல்வி

(மதி)

தென்னாபிரிக்காவில் நடைபெறும் மும்முனைத் தொடரின் மற்றொரு போட்டியில் கென்ய அணி இந்தியாவை 70 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது. இவ்வெற்றியுடன் சேர்த்து இந்தியாவை இரு முறை தோற்கடித்துள்ளது கென்ய அணி.

இப்போட்டியில் கென்ய அணித் தலைவர் உடும்பே விளையாடவில்லை. டிக்கோலோ தலைவராக கடமையாற்றினார்.

**ஸ்கோர் விபரம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 50 ஓவரில் 6 விக்கற் இழப்பிற்கு 246 ஓட்டங்கள் இதில்

**கென்யா 246/6**

| | |
|---|---|
| ஒட்டியானோ | -64 |
| நவீந்து | -50 |
| டிக்கோலோ | -27 |
| ஒடோயோ | -51 |
| டிஒட்டினோ | -26 |

**பந்துவீச்சில்**

| | |
|---|---|
| பிரசாத் | -8/2/45/2 |
| ஹர்வீந்தர்சிங் | -9/1/42/0 |
| சோதி | :3/14/0 |
| கும்ப்ளே | -10/1/36/1 |
| கங்குலி | -3/21/0 |
| ஹர்பஜன்சிங் | -10/1/38/2 |
| யுவராஜ்சிங் | -7/44/1 |

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46.4 ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

**இந்தியா 176/10**

| | |
|---|---|
| டெண்டுல்கார் | -03 |
| கங்குலி | -24 |
| ட்ராவிட் | -11 |
| மார்ட்டின் | -36 |
| யுவராஜசிங் | -00 |
| சோதி | -21 |
| குப்தா | -19 |
| ஹர்பஜன்சிங் | -37 |
| பிரசாத் | -10(ஆ.இ) |

இப்போட்டியில் இந்திய அணி சிங்கந்தாஸ், சேவாக் ஸ்ரீநாத், அகர்கார் ஆகியோருக்குப் பதிலாக,ஹர்விந்தர்சிங், பிரசாத் மார்ட்டின், சோதி ஆகியோரை சேர்த்து விளையாடியது.

**கென்ய அணியின் பந்து வீச்சில்**

| | |
|---|---|
| எம்.சுஜி | -10/1/37/1 |
| அங்காரா | -10/4/30/3 |
| ஒடோயோ | -9.4/41/3 |
| டி.சுஜி | -7/0/35/2 |
| ஒட்டியானோ | -10/2/32/1 |

இந்திய அணியினது தோல்விக்கு முக்கிய காரணமான அங்காரா ஆட்ட நாயகனாக தெரிவானார்.

## வாசகர் நெஞ்சம்

# மயானம் விளையாட்டு மைதானமாகிறது

தங்களது 02.10.2001ம் திகதி வெளிவந்த கதிரில் திருமலையைச் சேர்ந்த ஜீவானந்தன் மைதானம் மயானமாக மாறும் அபாயத்தைப் பற்றி எழுதியிருந்தார், ஆனால் மட்டக்களப்பில் மயானம் மைதானமாக மாறிவிட்டது.

கடந்த 02.10.2001ம் திகதி அமிர்தகழி பொது மயானத்திற்கு ஓர் மரண அடக்கத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த வேளையில், அங்கே மயானத்தில் 1/3 பங்கு கால்பந்தாட்ட மைதானமாக மாறியிருப்பதை அவதானிக்க கூடியதாயிருந்தது. மைதானமாகிய பகுதியில் எமது சொந்தக்காரருடைய பல புதையல்கள் உள்ளன. இது மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமானது. இதற்கு கம்பிவேலி போடப்பட்டு ஓர் காவலாளியும் இருந்தார். ஆனால் இப்போது ஒருவராலும் கவனிக்கப்படாத நிலையில் உள்ளது.

இதேவேளையில் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் ஒரு கிறிஸ்தவர் (கத்தோலிக், மெதடிஸ்ற்) மரித்தால் அடக்கம் செய்வதற்கு இடமில்லாமல் கஷ்டப்படுகின்றனர். காரணம் அவர்களுக்கென்று ஓர் மயானம் ஒதுக்கப்படவில்லை. இது மிகவும் பரிதாபமான நிலை. அடுத்ததாக அமிர்தகழி மக்களுக்கே மயான இடவசதி இல்லாமல் போகும் நிலையும் ஏற்படலாம்.

ஆகவே மாநகரசபை அதிகாரிகளோ அல்லது மாவட்ட செயலாளரோ உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

சி.சுகுணதாஸ், அமிர்தகழி.

# ஞாயிற்றுக்கிழமையும் நூலகத்தை திறக்கவும்

2001.10.01ம் திகதிய தினக்கதிர் பத்திரிகையில் வாழைச்சேனை பொதுநூலகம் பற்றி வெளியான செய்தியில் நூலக வாசகர்களால் தெரிவிக்கப்பட்ட முறைபாட்டிற்கு அமைய அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் 2001.11.01ம் திகதி தொடக்கம் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரம் நூலகத்தைத் திறந்து வைப்பதுடன் அதற்குப் பதிலாக திங்கட்கிழமைகளில் விடுமுறை தினமாக கருதி மூட நடவடிக்கை மேற்கொண்டால் நன்று.

மேலும் நூலகத்தைச் சேர்ந்தோர் தங்களுக்கு நாளாந்தம் கிடைக்கும் பத்திரிகைகளை காலை 9.00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பத்திரிகைப் பகுதியை மாத்திரம் பி.ப 4.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை திறந்து வைத்திருப்பதோடு நூலகத்தைச் சுற்றிவர சுத்தமாகவும் பூக்கன்றுகள் போன்றவற்றை நட்டு அழகாகவும் வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி.ப.கிருபானந்ததாசன்
செயலாளர், கோறளைப்பற்று பிரதேசசபை,
வாழைச்சேனை

# வாழைச்சேனையில் மின்சாரம் கூடிய நேரம் தடைப்படுவது ஏன்?

எங்கள் வாழைச்சேனை பிரதேசத்தின் மின்சார விநியோகம் மிக நீண்டகாலமாக சீர்கெட்டு காணப்படுகிறது. வழமையான மின்வெட்டுக்கும் மேலதிகமாக பகல்நேரங்களில் மின்விநியோகம் பெரும்பாலும் 5-10 மணிநேரம் தடைப்படுகின்றது. இப்பிரதேசத்தில் உள்ள மின்பணிமனை ஊழியர்களின் அசமந்தப்போக்கினாலேயே இந்நிலை தொடர்கின்றது. ஏதாவது இயற்கை நிகழ்வுகள், அசம்பாவிதங்களால் திடீரென மின்சாரம் தடைப்படும்போது உடனடியாக திருத்த வேலைகளை மேற்கொள்ளாமல் காலந்தாழ்த்துகின்றனர். இதனால் மின்பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுகின்றனர்.

மேலும் ஹபரணையிலிருந்து வரும் மின்சாரம் இடைவழியில் காட்டுப்பாதையில் (வாகநேரி முதலான பகுதிகளில்) ஏதாவது தடங்கலுக்குட்படும்போது மீண்டும் மின் விநியோகம் சீர்பெறுவதற்கு 12-24 மணிநேரம் வரை செலவாகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அம்பாறை (இங்கினியாகல) ஊடான மின்சாரத்தை எங்கள் பிரதேசத்துக்கு வழங்குவதன் மூலமாக இப்பிரதேச மக்களின் அசௌகரியங்களைக் குறைப்பதற்கு மின்சாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்மைக்காலத்தில் இங்கினியாகல ஊடான மின்சாரம் முற்றாக தடைப்பட்டிருந்த போது, ஹபரணை ஊடான மின்சாரமே மட்டக்களப்பின் சகல பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது. இதன்போது உயர் மின் அழுத்தம் நேரிடு மென்றால் வாழைச்சேனை பிரதேசத்தில் சில நேரங்களில் மின்வெட்டை அமுல் செய்து மட்டக்களப்பின் ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது.

ஆனால் அதேவேளை ஹபரணை ஊடான மின்சாரம் தடைப்படும்போது இங்கினியாகலை ஊடாக மின்சாரம் மட்டக்களப்பு நகர்ப்பகுதிகளுக்கு மட்டுமே முழுமையாக வழங்கப்படுகிறது. சில சமயங்களில் செங்கலடி வரையிலும் இவ்வாறு மின்சாரம் வழங்குகின்றனர். ஆனால் எங்கள் வாழைச்சேனை பகுதிக்கு இவ்வாறான இக்கட்டான சந்தர்ப்பங்களில் மின்சாரம் வழங்கப்படுவது மிகக் குறைவு. மட்டக்களப்பு பிராந்திய மின்சாரசபைப் பொறியியலாளர் மட்டக்களப்பு நகர் பிரதேசத்திலிருப்பதனால் தானோ என்னவோ மின்சாரசபை ஊழியர்கள் இவ்வாறு எவ்வழியிலாவது மட்டக்களப்பு நகருக்கு மட்டும் மின்விநியோகம் கிடைத்தால் போதுமென தொழிற்படுகின்றனர்.

எனவே இனிமேலாவது எங்கள் பிரதேச மின்விநியோகம் சீராக இடம்பெற நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் இங்கினியாகல ஊடான மின்சாரத்தையாவது தற்காலிகமாக தந்துவுமாறும் மின்சாரசபை ஊயரதிகாரிகளை வேண்டுகிறேன்.

எஸ்.வன்னமணி,
வாழைச்சேனை.

# வயலுக்குச் சென்ற என் கணவன் வழியில் இறந்துகிடக்கக்கண்டேன்

## அம்பிளாந்துறைச் சம்பவத்தில் மனைவி சாட்சியம்

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

அம்பிளாந்துறை முத்துலிங்கப் பிள்ளையார் கோயிலடியில் எனது கணவன் செல்லடி பட்டு இறந்து கிடப்பதாக காலை 10 மணிக்கு என்னிடம் வந்து ஊரவர் சிலர் தெரிவித்தனர். ஆனாலும் உடனே என்னால் அங்கு செல்ல முடியவில்லை. படையினரின் செல் தாக்குதல் ஓய்ந்ததும் அங்கு ஓடிச்சென்று பார்த்த போது எனது கணவர் இறந்து கிடந்தார். என நேற்று படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அம்பிளாந்துறையைச் சேர்ந்த சதாசிவம் கமலநாதனின் மனைவி விஜய லெட்சுமி களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேதப் பரிசோதனையின் போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் எனது கணவர் வயல் வேலைக்காக 6 மணிக்கு அத்தியா முன்மாரி கண்டத்திற்குச் சென்றார் பின்பு காலை, 8மணி தொடக்கம் குருக்கள்மடம் பகுதியில், இருந்து செல் தாக்குதல்கள் இடம்பெற்றன 10 மணியளவில் அயல் வீட்டார் என்னிடம் சொன்ன போதே எனது கணவர் இறந்ததை அறிந்தேன் என்றார்.

இறந்தவரான தம்பிமுத்து. மகேஸ்வரனின் தாயான வள்ளியம்மை சாட்சியமளிக்கையில் எனது மகன் கூலிவேலை செய்பவர் வயல் வேலைக்காக காலையில் சென்றிருந்தார். பின்பு சில மணி நேரம் கழித்து ஊரிலுள்ள எனது உறவினர் ஒருவர் வந்து எனது மகன் அம்பிளாந்துறை முத்துலிங்கப் பிள்ளையார் கோயில் பக்கத்தில் செல்லடிபட்டு இறந்து கிடப்பதாகக் கூறினார்,நான் உடனே கதறி அழுது கொண்டு அங்கு வந்துபார்த்தபோது எனது மகன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றார்.

உயிரிழந்த கமலநாதனின் அக்கா திருமதி.செங்கமலம் சாட்சி கூறுகையில் எனது தம்பி இறந்துள்ளதாக வீதியால் சென்றவர்கள் கூறினார்கள் ஓடிப்போய் பார்த்த போது காயங்களுடன் இறந்து கிடப்பதைகண்டேன் என்றார்.

விசாரணைகளை மரணவிசாரணை அதிகாரி எஸ்.பேரின்பநாயகம் மேற்கொண்டார். வைத்திய பரிசோதனையை மேற்கொண்ட களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் கமலநாதனின் கால், தொடைப் பகுதிகள் பாதித்தமையால் இரத்தப்பெருக்குக் காரணமாக நுரையீரல் பாதிப்படைந்து மரணம் ஏற்பட்டதாகவும், மகேஸ்வரனின் முள்ளந்தண்டுப்பகுதி முற்றாகப் பாதிக்கப்பட்டமையினாலும், பின் இடுப்பு உடைந்தமையினாலும் மரணம் ஏற்பட்டதாக தெரிவித்தார்.

# காத்தான்குடி நகர சபை ஊழியர் பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு

(பாண்டிருப்பு நிருபர்)

காத்தான்குடி நகரசபை ஊழியர்கள் அனுபவித்து வரும் பல்வேறு பிரச்சினைகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை ஒன்றினை வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கு அகில இலங்கை பொது ஊழியர்கள் சங்கம் அனுப்பி வைத்துள்ளது.

இவ்வறிக்கையில் தற்காலிக சமயா சபை ஊழியர்களாக கடந்த பல வருடங்களாக கடமையாற்றி வருபவர்களுக்கு நியமனம் வழங்காமை, பொது நூலக ஊழியர் பற்றாக்குறை, நகரசபையின் சகாதார சீர்கேடுகள் பற்றிய புகார்கள், ஊழியர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு அ. இ. அ. பொ. ஊழியர் சங்கத் தலைவர் கையொப்பமிட்டு, இவ்வறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தலைவர் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு....

உதவு வதற்குத் தயாராகவுள்ளதாகவும் ,புலிகள் வந்தால் தமக்குத் தகவல் தருமாறும் அறிவிக்கப்பட்டது.

புலிகளை விட புலிகளுக்கு ஆதரவு வழங்குபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கபடும் எனவும், படையினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலை 7மணி முதல் 10 மணி வரை நடைபெற்ற சுற்றிவளைப்பில் நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸ், விசேட அதிரடிப்படை, இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்..ஆனால் இச்சம்பவத்தில் யாரும் கைது செய்யப்படவி ல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று கடந்த வாரமும் [illegible]ங்கம், அமிர்தகழி, புன்னச்சோலை போன்ற பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டு அப்பகுதி மக்களை ஆலயங்களிற்கு அழைத்து அறிவுறுத்தல்கள் பல விடுக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

### படையினரின்...

பகுதியில் 5 எறிகணைகள் வந்து வெடித்தாகவும் மக்கள் கூறினர்.

எறிகணைகளால் காயமடைந்தவர்களுக்கு உடன் சிகிச்சை அளிக்க முடியாமலும் உடன் வைத்தியசாலைக்கு



காயமடைந்த ஏ. புவிதுராஜா. எஸ். பத்மநாதன் அம்பிளாந்துறை

கொண்டு செல்ல முடியாமலும், சீரான போக்குவரத்து இன்மை யால் படையினர் அங் கிருந்து சென்ற பின்புதான் நேற்று மாலை 1மணியளவில் காயமடைந்தவர்களை உழவு இயந்திரத்தின் மூலம் களுவாஞ்சிக்குடி வைத்திய சாலைக்கு கொண்டு சென்றதாக காயமடைந்த அம்பிளாந்துறையைச் சேர்ந்த கே. சீவரெத்தினத்தின் மைத்துனர் எஸ் நாகராசா தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

#### பொலிஸ் தகவல்

இதேவேளை இப்படை நகர்வு தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ. எல் ஜயநாத் தகவல் தருகையில் நேற்று புலிகளின் ஐந்து அலுவலகங்களை நிர்மூலமாக்கியதாகவும் அங்கிருந்த பல பொருள்களை தாம் கைப்பற்றியத்ாகவும் புலி உறுப்பினரின் ஒரு சடலத்தை தாம் கைப்பறியதாகவும் கூறினார்.



காயமடைந்த கே சீவரெட்ணம் அம்பிளாந்துறை

# ஒதுக்கிய நிதி கிடைக்குமா?

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் பிடித்தொழில் அபிவிருத்திக்காக 46 இலட்சம் ரூபா ஒதுக்கப் பட்டிருந்தும் 6 இலட்சம் ரூபா மட்டுமே வந்து சேர்ந்துள்ளதாக மீன்பிடித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதையிட்டு நேற்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா மீன்பிடி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டபோது எஞ்சிய 40 இலட்சம் ரூபாவையும் உடன் அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய செயலகப் பிரிவை உடனடியாக நிறுத்தக் கோரிக்கை

(வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கோரளைப்பற்று மத்திய பிரதேச செயலகப்பிரிவை உடன் நிறுத்துமாறு கோரி ஜனாதிபதிக்கு மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை அவசரத் தொலைமடல் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இப்புதிய பிரதேச செயலகப் பிரிவு அமைக்கும் நடவடிக்கை தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் விரிசல் நிலையை ஏற்படுத்தும் இது தேர்தலுக்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

எமது தலைவர் சிவசிதம்பரத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப்புதிய பிரதேச .செயலக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்ததையும் நாம் ஞாபகப்படுத்துகின்றோம்: என அத்தொலைநகலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர்

### ஐ.தே.க....

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் தலைமை வேட்பாளராகவுள்ள ஜோசப் பரராஜசிங்கத்திடமும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் முன்மொழிந்து .தொலைநகல் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இதேவேளை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு ஆசனம் மட்டுமே மட்டக்களப்பிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ,அது கடந்த தேர்தலில் போட்டியிட்ட பழுகாமத்தைச் சேர்ந்த வெள்ளிமலைக்கு கொடுக்கப்பட்டதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இராஜன் சத்தியமூர்த்தி மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க அமைப்பாளராகவும் இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் பாடசாலை ஆசிரியர், மாணவர்களை சிங்கள கல்வியதிகாரிகள் மேற்பார்வை

(காரைதீவு நிருபர்)

ஊவா மாகாணத்தில் உள்ள 172 தமிழ் பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்களை சிங்கள மொழிமூல விசேட பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் மேற்பார்வை செய்வதையும் வினாக்களைக் கேட்டு துன்புறுத்துவதும் கண்டனத்துக் குரியது. இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் கண்டனம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

ஊவா மாகாணத்தில் பதுளை பண்டாரவளை, பசறை என மூன்று கல்வி வலயங்கள் உண்டு. இதில் 172 தமிழ் பாடசாலைகள் உள்ளன. அங்கு 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள்.

ஆனால் இவர்களைக் கண்காணிக்க அல்லது தமிழ ஆசிரியர்களை மேற்பார்வை செய்ய தமிழ் மொழிமூல விசேட பாடஉதவிக் கல்விப் பணிப்பாளர்களோ ஆசிரிய ஆலோசகர்களோ இன்றுவரை நியமிக்கப்படவில்லை அது மட்டுமல்ல, மேற்படி பாடசாலையில் சிற்றூழியர்களாக தமிழ் தெரியாத சிங்களவர்களே கடமையாற்றி வருகின்றனர். இதனால் பாடசாலை நிருவாகம், மாணவர்கள் பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் இனியாவது இவற்றை நிவர்த்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்

### தினக்கதிர் வாணிவிழா

எமது நிறுவனத்தின் வாணி விழா நாளை பகல் 12மணிக்கு தினக்கதிர் கரும பீடத்தில் இடம்பெறும் என்பதை வாசகர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்

# கடற்றொழிலாளர்கள் நேற்று மறியற்போராட்டம்

வட்மராட்சிக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி, சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு கோரி, வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் நேற்று பிரதேச ரீதியில் மறியற் போராட்டத்தை நடத்தினர். கடந்த மாதம் முதலாம் திகதி முதல் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கி, தம்மை சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு தாம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்ததாகவும் - தமது கோரிக்கையை நிறைவேற்ற கடந்த 19ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருந்ததாகவும் -தமது கோரிக்கை சம்பந்தப்பட்டவர்களால் புறக்கணிக்கப்பட்டதால் வேறுவழியின்றித் தாங்கள் மறியற் போராட்டத்தில் இறங்க வேண்டியேற் பட்டதாகவும் தெரிவித்தனர். நேற்றுக் காலை 6 மணிமுதல் பகல் 10 மணிவரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


## தினக்கதிர்

### தேர்தல் விளம்பர கட்டண விபரம்

| அளவுகள் | தினசரி | வாரமலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | 16,000/= | 20,000/= |
| அரைப் பக்கம் | 8,000/= | 10,000/= |
| கால் பக்கம் | 4,000/= | 5,000/= |
| 1கலம் செ.மீ. கட்டணம் | 80/= | 100/= |

முன் பக்கத்திற்கு மேலதிக கட்டணம் .50%

பின் பக்கத்திற்கு மேலதிக கட்டணம் 25%


# யாழ் நகரில் இளைஞன் மீது பொலீஸார் துப்பாக்கிச் சூடு

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நாவலர்வீதிச் சந்தியை நோக்கி சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், அவ்விளைஞர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

நேற்று மாலை 2:45 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை குகராஜா(23) எனும் மேற்படி இளைஞனை. பொலீஸ் ஜீப்பில் துரத்திக்கொண்டு வந்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலீஸார். படுகாயமடைந்த நிலையில் அவ்விளைஞனை ஜீப்பில்ஏற்றிச் சென்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.